
பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ௧




# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1-12 |

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஞு வைகாசி-மீ 24-உ (6—6—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 6.

## உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும், வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லேசென்சும், எமதுகம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) ¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
வத்தலக்குண்டு S. I. Ry.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## ஓர் 'அந்தணர்' 'சூத்திரர்' என ஒப்புக்கொண்டார்.

கோவை கம்மவாலிபர் மகாநாடு கூட்டும் நிமித்தம் பிரசாரம் செய்தல் பொருட்டு யானும் எனது ஆசிரியர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய ஆஜ்ஞையின் வண்ணம் என் நண்பர் K. V. நாராயணசாமி, G. ராமசாமி என்னும் மாணவர்களுடன் பின்சென்றேன். நாங்கள் அவிநாசி தாலூக்கா கம்மவார் வசிக்கும் கிராமங்கட்குச் சென்றோம். பல ஊர்களில் கம்ம சங்கங்களைப் பற்றியும் கதராடையைப் பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினோம். அங்ஙனமே அவிநாசி தாலூக்கா போதநாயக்கன் புதூரிலும் பிரசங்கம் செய்யப்பெற்றது. அப்பிரசங்கத்தின் கண் சாதியின் இயல்புகள், பழக்க வழக்கங்கள், குறைவுகள் முதலியவற்றைப்பற்றிப் பண்டிதர் விஸ்தாரமாய் பிரசங்கம் புரிந்தார்.

மேற் சொன்ன பிரசங்கத்தை ஓர் "அந்தணர்" உற்றுக்கேட்டுக் கொண்டிருந்தார் அவர் நாமம் வி. கே. ஸ்ரீனிவாசராவ் என்பது. இவர் இப்பக்கம் சாலையபாளையம் என்னும் கிராமத்தில் கணக்கு வேலை செய்து பொது ஜனங்கள் பேசும்படியான தன்மை வாய்ந்தவர். இவ்வாறான ஸ்ரீமான் ஸ்ரீனிவாசராவ் எழுந்திருந்து ஸ்ரீமான் பண்டிதர் சொற்பொழிவை பெரிதும் புகழ்ந்து விட்டுதாம் கீழ் கண்டவண்ணம் பேசினார்.

"மகா ஜனங்களே! உலகின்கண் உண்மை 'அந்தணர்' யாரும் இல்லை. அனைவரும் அடிமையாகி அடிமைத்தொழில் புரிந்து 'சூத்திரராய்விட்டனர். இவர்கள் அடிமையாய் சூத்திரரிலும் கடைபற்ற சூத்திரராய் விட்டனர். இவர்கள் நம் பாரத கண்டத்தையே கெடுத்துவிட்டனர். எல்லாரும் தன்னை "அந்தணன்" என்னும் வண்ணம் வஞ்சகமாய் நடக்கின்றனர். தனக்கு கீழான வகுப்பினரிடம் அடிமைத் தொழில் புரிந்து அன்னவனை அடி வணங்கி அந்தணத்துவத்தை அடியோடு துறந்திடக்கும் நன்மெய்யற்ற ஒருவன் அந்தணனோ? இல்லை இல்லை; பல "அந்தணர்" பரிசுத்தம் என்பதற்று பல இழிதொழில்களாகிய ஆட்டு வியாபாரம், தோல் வியாபாரம், க்ஷவரம் புரிதல் முதலியவற்றைப் புரிந்து பிராமணத்துவத்தை சிதைத்து விடுகின்றனரே. அந்தோ! என்ன கொடுமை! என்ன பாவம்! எல்லாரும் மதிக்கும் மதிபடைத்த 'அந்தணத்துவம்' அடியற்று அடங்கிவிட்டது. யானும் இக்காலத்து அடிமைத்தொழில் புரிந்து வருவதால் யான் அந்தணன் அல்லேன்; யான் சூத்திரனே. ஆதலின் கனவான்களே! இனிமேல் என்னைப் "பிராமணன்" என எண்ணாதீர். 'சூத்திரர்'க்குரிய நாமமாகிய தாசன் என்னும் பெயரையான் வைத்துக்கொண்டேன். ஆதலின் இன்று தொட்டு வி. கே. ஸ்ரீனிவாச ராவ் என்றழைக்காமல் வி. கே. எஸ். தாஸ் என்று அழைக்கவேண்டும். யான் இனி "அந்தணன்" அல்லேன். "சூத்திரன்" ஆய்விட்டேன்" என உரைத்து விட்டு உட்கார்ந்தார்.

இக்காலத்தில் "பிராமணன்" என்போன் எவ்வித அடிமைத்தொழிலும் புரியாமலன் வருகின்றான். அவ்விதம் செய்ய அன்னவனுக்கு கூச்சம், மானம் என்பன இலை என்பது யாவருக்கும் தெள்ளெனத் தெரியும். சிற்சில இடங்களில் பிராமணத்துவம் உள்ள உண்மைப் பிராமணர் இருக்கலாம். பல வகுப்பினரிலும் பலர் உண்மை உரைப்போராய் பிராமணத்துவம் பூண்டுளார். உண்மை உரைப்போர், உண்மைப்பிராமணரேயன்றோ? ஆதலின் எச் சாதியாயினும் தன்னவரை அடிவணங்கல் அமைவுடைத்தாரும் ஆதலின் எப்பிறப்பாயினும் பிராமணத்துவம் உண்மை, குணம், தொழில்களைப் பற்றி வரவேண்டுமே தவிர பிறப்பினால் பிராமணத்துவம் வராது. ஆதலின் அடிமைத் தொழில், இழிதொழில் புரியும் பிராமணர் என்போர் உண்மையாகவே தாங்கள் முன்வந்து ஸ்ரீமான் ஸி. கே. ஸ்ரீனிவாசதாஸ் போல தாங்கள் அடிமையாகிய "சூத்திரர்" என ஒப்புக்கொள்ளல் தகைமையை உடைத்தாரும் அஃது இல்லாமல் போலி உயர்வுப்பெயர்களை வைத்துக்கொண்டு ராவ், அய்யர், அய்யங்கார், ஆச்சாரி எனத்திரிவதினால் யாதோர் பயனுமில்லது. இங்ஙனம் தாங்களே தங்கள் இழிவை ஒப்புக்கொண்டு தங்கள் போலிப் பிராமணத்துவத்தை நீக்கினால் தான் உண்மை பிராமணீயம் நம் நாட்டில் வலிமைபடவரும். ஆதலின் இப்பாதகர்களாகிய பிராமணர் யாரும் நரகிற்குள்ளாகாவண்ணம் நற்காரியங்களைப் புரிதல் அவசியம், தாங்கள் போலிப் பெயர்களை நீக்கி, தங்கள் இழிதொழிலுக்கேற்ப தாஸன் என்னும் நாமம் தரித்தலே தகுதி. மேற்கண்ட வண்ணம் தான் அடிமையாதலின் அந்தணன் அல்லன் என ஒப்புக்கொண்ட ஸ்ரீமான் ஸி. கே. ஸ்ரீனிவாசதாசனுக்கு அநேக வணக்கம் அளிக்கின்றேன். உண்மைப்பிராமணீயம் என்றும் நாள் என்றோவோ? அந்நாளே அன்னையர் பாரதமாதா அழகமிழும் நாள். இதற்கு ஆண்டவன் அருள்புரிவாராக,

---

## கைத்தொழிற் கல்வி போதிப்பதெப்படி.

இப்போது நமது இந்திய நாட்டில் கைத்தொழிலும், விவசாயமும் முன்னேறாமல் க்ஷீணித்து வருகிறதினால் இவைகளின் முன்னேற்றத்திற்காகக் கட்டாய ஆரம்பக் கல்வியுடன் கைத்தொழில் முக்கியமாய் கற்றுக்கொடுக்கவும் விவசாயம் செய்யும் முறைகளைக் கற்றுக்கொடுக்கவும் செய்து வந்தால் அவர்களுக்கு இந்தப் படிப்பு வீணாகப் போகாமல் உபயோகப்படும். ஆகையால், இதைச் சொல்லிக்கொடுக்க சுதேச பாஷையில் புத்தகங்கள் அச்சிட்டு ஆரம்ப பாடசாலைகளில் உபாத்தியாயர்களைக்கொண்டு கற்பித்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும். இவ்விதம் அரசாங்கப்படிப்பு இலாக்காக் காரர்கள் செய்து வருவரேல் நலம் பயக்காதோ? இவ்வாறு ஏற்பாடு செய்தால் அவர்களுக்கு அதிகப்பணச் செலவும் ஏற்படாது. ஆகையால், எல்லோரும் கேட்டுக் கொண்டால், இவ்விதம் செய்ய ஆக்ஷேபனை செய்யாமல் நல் வழிக்குக் கொண்டுவருவார்களென்று நம்புகிறேன்.

ஆகையால், எனதன்பார்ந்த நண்பர்களே! இதை முன்னுக்குக் கொண்டுவர எல்லோரும் சிரத்தை எடுத்து அவரவர்கள் மனதில் தோன்றியதை இப்பத்திரிகை மூலமாக அடிக்கடி வெளிப்படுத்தி நம்முடைய நாடு முன்னேறும்படி செய்யக் கோருகிறேன்.

டி. எ. கணபதி பிள்ளை,
வாட்டர் ஒர்க்ஸ் சூப்பிரெண்டெண்ட், மதுரை.

## ஈரோடு வாலிபர் சங்கம்.

ஈரோடு "வாலிபர் சங்கம்" என்ற தலையங்கத்துடன் ஓர்பழைய அங்கத்தினர் நமது 'குடிஅரசில்' 2—5—26 ல் எழுதியிருந்த விஷயங்கள் யாவும் உண்மையிலும் உண்மையென்பதை மறுக்க முடியாது என்பதும் திண்ணம். டை சங்கத்தின் விஷயமாய் இனியும் சிரத்தை யெடுத்துக் கொள்ளாமலிருப்பதைப் பார்க்க பழைய அங்கத்தினர்கள் வருந்தாமலிருக்க மாட்டார்கள். நமது ஈரோட்டில் சில சங்கம் இருப்பதாக நினைத்தோம். அப்படி இருக்கும் இரண்டொரு சபைக்கும் பொது நல சபைகள் அல்லவென்றே சொல்லலாம். ஆனால் மறுபடியும் "வாலிபர் சங்கத்தை" உயிர்பெற்று உலாவச்செய்ய ஒவ்வொரு அங்கத்தினரும் பங்கெடுத்துச் செய்தால் நாளோ சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பொது நலத்திற்கு உதவியுறும் என்பதை நாம் கூறாமலே ஈரோடு வாசிகள் அறிந்த விஷயம். ஆனால் மகா-ள-ஸ்ரீ எஸ். சாம்பசிவம் பிள்ளை (அக்கிராசனர்) அவர்கள் ஓர் கூட்டம் (மீட்டிங்) கூட்டி அதில் தன் வசமிருக்கும் சங்கத்தின் சாமான்களையும் கணக்குகளையும் ஒப்புவித்து மறுபடியும் சங்கம் விர்த்தியடைய மார்க்கம் தேடுவார் என்றும், அதற்கு எல்லாம் வல்ல கடவுளும் திருவுளம் சாய்ப்பார் என்றும் நம்புகிறோம். மற்ற சகோதர அங்கத்தினர்களாகிய ஸ்ரீமான்கள் ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், கே. ஏ. ஷேக்தாவூத் சாய்பு அவர்களும், தென்னாட்டு தலைவரும், நமது "குடி அரசின்" ஆசிரியருமாகிய ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களும் மற்றுமுள்ள சகோதர அங்கத்தினர்களும் வேண்டும் முயற்சி செய்து ஈரோடு "வாலிபர் சங்கத்தை" நடத்த முன்வருவதுதான் சிலாக்கியம் என்பதையும் மறுபடியும் நாம் நமது சகோதர அங்கத்தினர்களை வேண்டுவதுடன் கடவுளும் பக்கத்துணையிருந்து சங்கத்தை நடத்த உதவி புரியும்படி எல்லாம் வல்ல ஈசனை தியானிக்கிறோம்.

ஓர் அங்கத்தினர்.

---

## இதென்ன அநியாயம்?

திருச்சினாப்பள்ளி ஜில்லா, மணப்பாறையைச்சேர்ந்த வேங்கைக்குறிச்சி என்ற கிராமத்தில், தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றங் கருதி ஏற்பட்டிருக்கும் லேபர் இலாக்காவால் நடத்தப்பட்டுவரும் ஓர் எலிமெண்டரி பாடசாலையில், இரண்டு உபாத்தியாயர் வேலை செய்துவருகிறார்கள். தலைமை உபாத்தியாயர் நான்காம் வகுப்பு (Primary) தேறிய ஓர் "உயர்தர" இந்து வகுப்பினர். இவருக்குச் சம்பளம் ரூபாய் 22. இவர் கையின்கீழ் வேலைசெய்யும் உதவி உபாத்தியாயர் "கீழ்தர" வகுப்பைச் சார்ந்தவர். இவர் பத்தாம் வகுப்பு (S. S. L. C.) தேறியவர். இவருக்குச் சம்பளம் ரூ. 15 தான். இவர் பள்ளிக்கூட நேரங்களிலும், மற்ற நேரங்களிலும், நாற்காலியின் மேலாவது வேறெவ்விதமான உயர்நிலை இருப்பிலாவது உட்காரவே கூடாதாம். கீழேதான் உட்கார்ந்து பாடம் சொல்லிக்கொடுக்கவேண்டுமாம். உயர் ஜாதி ஆட்கள் வரும்போதெல்லாம் இந்த உபாத்தியாயர் எழுந்து நின்று கை கூப்பிக் கும்பிடவேண்டுமாம். ஊர் ஜனங்களும், கிராமக் கணக்கப்பிள்ளையும் சேர்ந்து பலாத்கார முறையில் இம்மாதிரி செய்துவருகிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென்று நியமித்திருக்கும் லேபர் பாடசாலைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

ஜாதிச்செருக்கு என்று ஒழியுமோ!

## முரசொலி.

—:0:—

(ஒரு விருந்து:—இவ்வார முதற்கொண்டு நமது அன்பர்களுக்கு விருந்தொன்று அளித்து வர விரும்புகின்றோம். நாம் விருந்திடும் இலைக்கு "முரசொலி" எனப் பெயர். இந்த இலையான "முரசொலி" யில் தெவிட்டாத அருஞ்சுவைச் சிற்றுண்டிகள் பல பரிமாறப் பெறும். இவ்வுண்டி, நனந்தலை யுலகில் நடக்கும் பல விஷயங்களில் முக்கியமான சிலவற்றை சுருங்கச் சொல்லி விளங்கவைத்தலே யாகும். இதனை அன்பர்கள் ஏற்று அருந்தி "குடி அரசு" க்குப் பெருந்துணை புரிவார்களாக. (மண ௨வ ரெ, தி.)

* * * *

"Swarajya" என்பதை "ஸ்வராஜ்யம்" என்றாவது "ஸ்வராஜ்யா" எனலும் ஆபாஸமாம். சென்னையில் இப்பெயர்கொண்டு பிரசுரிக்கப்படும் தமிழத் தினசரிப் பத்திரிகை இத்தவறை உணர்ந்து உடனே தன் பெயரை "ஸ்வராஜ்யம்" என்று எழுதக் கற்றுக்கொள்ளுமென்று நம்புகிறேன் என 'லோகோபகாரி'யில் பொறிக்கப்பட்டிருக்கிறது. தவறை உணர்ந்து பிழையைத்திருத்திக்கொள்வது அவமானமெனக்கருதி மீண்டும் அப்படியே "ஸ்வராஜ்யா" என வரைவது இன்னும் மாபெரும் வெட்கக்கேட்டை உண்டுபண்ணுமென்பது ஏனோ அதற்குப் புலனாகவில்லை.

* * * *

தமிழ் ஒன்றைத் தவிர மற்றெந்த இந்திய பாஷையிலும் இம்மாதிரி தப்புத் தண்டாக்கள் நிகழ்வதில்லை" என்று 'சமரச போதினி'யில் பல மொழிப் புலவரான ஸ்ரீமான் மகேசகுமாரசர்மா முத்திரா ராக்ஷசன் என்ற புனைப்பெயருடன் உரைகள் என்ற பகுதியில் எழுதியிருக்கிறார். ஆனால் எத்தனையோ பண்டிதர்களிடம் கேட்டு "ஸ்வராஜ்யா" என்று பெயரிட்டிருப்பதாக அதன் தலைவர் ஒருவர் கூறியதாக எமக்குக் கேள்வி. 'சுயராஜ்யம்' என்றால் எதனையும் விடப் பொருத்தமாயிருக்கும் என்பது எமது கருத்து. இதுவும் அவர்வாக்கு.

* * * *

"ஸ்வராஜ்யா" என்ற தினசரிப் பத்திரிகை மின்னொளி என்ற தலைப்பின் கீழ் நமது ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் கண்ணீர் வடிக்கிறார். அது மாயக் கண்ணீரா, மனமார்ந்த கண்ணீரா? 1,000-த்தில் இருவரே கதர் கட்டுவோர் என்பதுதான் அவர் கண்ணீர்விடக் காரணம் எனக் குறிப்பிடுவதுமன்றி கதர்தொண்டுக்கு அவரது 'குடி அரசு' என்ன செய்கின்றது? வசை புராணம் பாடும் வேலையைவிட்டு கதர்பிரசாரத்தில் இறங்கக்கூடாதோ? இறங்கின் இசை பெறலாம் அன்றோ, எனவும் வினவுகிறது.

* * * *

கதர் விஷயத்தைக் காங்கிரஸில் சேர்த்ததால்தான் காங்கிரஸ் குட்டிச்சுவராய் போய் விட்டதென்று சென்னைப் பிரமுகர் ஸ்ரீனிவாசய்யங்கார் கூறுகிறாரென்று 'குடி அரசு' கூறுவதை 'ஸ்வராஜ்யா' ஆசிரியருக்கு நாம் சமர்ப்பித்துவிட்டு, ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் 1,000-த்தில் இருவரே கதர் கட்டுகிறார்களெனக் கூறிய காலை கண்ணீர் வடித்தது மாயக் கண்ணீரா அல்லது மனமார்ந்த கண்ணீரா என்பதைமார்பில் கையை வைத்துக் கூறும்வண்ணம் அவரை நாம் கடாவுகிறோம். மேலும் கதர் விஷயத்தில் பாடுபடுவது 'குடி அரசா' அல்லது "ஸ்வராஜ்ய"வா என்பதும் அப்போது உள்ளங்கை நெல்லிக்கனியாக அவரது உள்ளத்தில் விளங்குமென்பது எமது திடமான எண்ணம்.

* * * *

தமிழ் நாட்டு சுயராஜ்யக்கட்சியின் தலைவரான நமது திருமயிலை ஸ்ரீனிவாசய்யங்கார் சட்ட சபை எலக்ஷன் பிரசாரத்தில் மும்மரமாயிருக்கிறார். ஆனால் அவர் ஒரு பேச்சிலாவது ராட்டினத்தைப் பற்றியும் கதரைப்பற்றியும் பேசுவதில்லை. அவர் நாட்டிலெல்லாம் சட்ட சபையையே நாடி நிற்கையில் "ஸ்வராஜ்யா" எனப் பெயர் பூண்ட இப்பத்திரிகை சுயராஜ்யக்கட்சித் தலைவரை எச்சரிக்கை செய்யாது, இரை விழுங்கின பாம்பு போல் வாளாக்கிடந்து, "தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்கின்றாள், தம்பி குன்னக்குடியில் கோதானஞ் செய்கிறான்" என்பதுபோல ஈரோடு பேரறிவாளர் இராமசாமிநாயக்கரவர்களுக்கு புத்தி புகட்ட முன் வருவது எவ்வளவு சின்னத்தன மென்பதை நாம் விளக்க வேண்டுமோ?

## காங்கிரஸ் நாடகம்.

("சண்டாளன்" எழுதுவது.)

("குடி அரசு" மாலை 2- மலர் 1- தொடர்ச்சி.)

2-5-26-உய "குடி அரசு" தாளில் இத்தலைப்பின்கீழ் ஒரு கட்டுரை நாம் வரைந்தோம். நாம் எண்ணியிருந்தவாறே "தமிழ்நாடு" உள்ளிட்ட சில பத்திரிகைகளும் பல நண்பர்களும் கட்டுரையின் மீது சீற்றங் கொள்ளுகிறார்கள். நமது வியாசத்தின் சாராம்சத்தை ஊன்றிப் படித்திருப்பார்களாயின் எவரும் சீற்றங்கொள்ளவேண்டிய அவசியமிருந்திருக்காது. "தற்காலக் காங்கிரஸின் போக்கு" என்று இரண்டிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். காங்கிரஸ் மீது எமக்கு அளவுகடந்த அபிமானம் உண்டு. காங்கிரஸ் செம்மை நெறிபற்றி தொண்டாற்ற வேண்டுமென்பதே எமது உட்கிடக்கை. காந்தியடிகள் தலைமையின்கீழ் நடைபெற்ற ஒத்துழையாமை (தூய)க் காங்கிரஸை நாம் தாக்கவுமில்லை; தாக்குகிறதுமில்லை; என்றும் தாக்க எம்மனம் எழாது. சுயராஜ்யக் கக்ஷியார் சுவாதீனப் படுத்திக் கொண்டு சூஸ்திரதாரராக இருந்து ஆட்டி வைப்பதைக் கண்டுதான் நாம் "காங்கிரஸ் நாடகம்" என்று கூறுகின்றோம். எமது கருத்தை அறியாது "தமிழ்நாடு" தனது தாளில் ஒரு கலத்தை நிறப்பிக்கொண்டது. யாம் வரைந்திருந்த கட்டுரையை அப்படியே பொறித்து தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தால் நேயர்களேனும் எமது உண்மை உள்ளக்கிடக்கையை உணர்ந்திருப்பார்கள். அங்ஙனமின்றி தனது அபிப்பிராயத்தைமட்டும் எழுதி நேயர்கள் தப்பபிப்பிராயப்படும்படி செய்தது குறித்து நாம் வருந்தாமலிருக்கமுடியவில்லை. எவர் ஏது சொல்லினும் சொல்லுக. நமது நேயர்கள் எமது புல்லிய விஷயத்தைக் கொள்ளுவார்களாயின் எமது அபிப்பிராயத்தை அடிக்கடி அறிவித்துவரச் சிறிதும் பின் வாங்கோம். இந்நாடகத்தை இன்னும் விரித்து எழுத நமக்கு ஒரு புதிய சக்தி உண்டாயிருக்கிறது.

* * *

கோமளா சேஷாத்திரியிடம் சொன்னதற்கேற்ப உடனே ஒரு தலைவருக்கு (முதல் வகுப்பு டிக்கெட்டுக்கு) பிரயாணச் செலவு கொடுத்து வரவழைத்து வெகு ஆடம்பரத்துடன் தலைவரை ஊர்வலமாக அழைத்து காபி, டீ, விஸ்கி, ஜின், பிராண்டி போன்ற நாகரீக (மதுவிலக்கு தீர்மானத்தில் குறிப்பிடாத) குடி பானங்கள் தயாரித்து தலைவருக்கு வழங்கியதுடன் அஸ்திவாரக் கல் நாட்டும் விழா வெகு சிறப்புடன் நடந்தேறியது. மூன்று மாதங்களுள் மாளிகையும் கட்டப்பட்டுவிட்டது. ஒரு உண்மைத் தேசாபிமானியும், உடல் பொருள், ஆவி மூன்றையும் தேசத்திற்கு அர்ப்பணம் செய்தவரும், ஏழைகட்கென இடையறாது கடனாற்றி வருபவரும் ஆகிய ஒரு வீரத் தலைவரை திறப்புவிழாவை நடாத்துதற்கு தாசி கோமளம் தேர்ந்தெடுத்தாள். அப் பெரியாருக்கு கடிதம் வரைந்தாள். மறுத்துவிட்டதுடன் கண்டித்ததாகவும் ஓர் வதந்தி ஊரில் பரவியிருந்தது. உடனே வேறொரு தலைவர் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர்தான் தேசபக்தர் வாசன் ஆவார். அதுகாலை சொற்பொழிவாற்றும் திறமை வாய்ந்த சில சித்வமணிகளும் விஜயம் செய்திருந்தனர். விழாவின் தோற்றத்தையும் நிகழ்ச்சியையும் இங்கு சுருக்கி குறிப்பிடுகின்றேன்.

* * *

சுவற்றில் தமிழ்நாட்டுத் தலைவரவர்கள் வருகையைப் பற்றிய விளம்பரம் எங்குக் காணப்பட்டது. நகரமெங்கும் சீமதி கோமளா மாளிகைத் திறப்புவிழாவைக் குறித்த துண்டுப்பிரசுரங்கள் மயமாகவே தோன்றியது. வழியெங்கும் வரவேற்பு வாக்கியங்கள் வரையப்பட்ட வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. பல மோட்டார்கார்கள் வீதிதோறும் பறந்துகொண்டிருந்தன. இவ்விழா நகர மக்கள் அனைவர் எண்ணத்தையும் பெரிதும் ஈர்த்துவிட்டது என்று சொல்லுவது பொருந்தும். தலைவரும் சொற்பொருக்கு நிகழ்த்துவோரும் நகரத்திலிருந்த ஒரு காங்கிரஸ் காரியதரிசியால் வரவேற்கப்பட்டு அழைத்துவரப் பெற்றனர். சுமார் 5000 ஜனங்கள் நிறைந்த ஓர் கூட்டத்தினிடையே, மாளிகைக்கு முன்னர் பிரத்தியேகமாக அமைக்கப் பெற்றிருந்த ஒரு கொட்டகையில் ஓர் பாலிருந்த மேடையில் தலைவர் பலத்த கரகோஷத்துடன் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். சுந்திரமூர்த்திகள் ஆகிய சொற்பொழிவாளர்களும் பக்கத்தில் உட்கார்ந்தனர். தலைவர் அதுபோது பேசிய முகவுரைப் பிரசங்கத்தின் சாரம்சம் வருமாறு:—

சகோதரர்களே! சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது பிரிய வந்தனம். உங்கட்குச் சிறிதும் தொடர்பில்லாத ஒரு விழாவிற்கு நீங்கள் வந்திருப்பதானது காங்கிரஸ்மீதிலும், என்மீதிலும் நீங்கள் வைத்திருக்கும் அன்பையும், மதிப்பையும் நன்கு

## 'மித்திரன்' நிருபரின் அட்டூழியம்.

### நாகை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம்.

எனது தலைமையில் மே-மாதம் 26-ம் தேதி நடந்த தொழிலாளர் கூட்டத்தில் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களால் பேசிய விஷயங்களையும் நான் ராஜிநாமா செய்ததின் காரணத்தையும் முற்றிலும் திருத்தி "சுதேசமித்திர"னில் அதன் நிருபர் வெளியிட்டிருக்கிறார். நான் ராஜிநாமா செய்ததானது திரு. நாயக்கரவர்களை அவமானப்படுத்தியதாகு மெனச் சொன்னதாகவும் திரு. நாயக்கருக்குள்ள மானத்தை காப்பாற்ற இந்நிருபர் சிரமப்படுகிறார். நாயக்கர் பேசிய வற்றிற்கு நாயக்கர் பதிலெழுதுவார். நான் சம்பந்தப்பட்டமட்டில் இந்நிருபரின் செய்கையால் எங்கள் தொழிலாளர் சமூகத்திற்கே தீங்கு செய்ய நினைக்கிறார் என்றே எண்ணுகிறேன். நான் ராஜிநாமா செய்ததின் காரணமாவது:—அங்கத்தினர்கள் பல ராஜீயககட்சியில் சேர்ந்து தொழிலாளர் சங்கவிஷயத்தில் ஒத்துழைப்பின்றி சங்கத்தில் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்க முடியாமலிருப்பதால் நான் ராஜிநாமா செய்கிறேன் என்று கடிதத்தில் எழுதிக்கொடுத்து அதைக் காரியதரிசியை வாசிக்கும்படி சொன்னேன். நானும் அதையே மீண்டும் வற்புறுத்திக் கூறியிருக்க வெளியார்கள் சங்க நிர்வாகத்தில் இருக்கக் கூடாதென்று திரு- நாயக்கர் கூறியதற்கு நான் வெளியார்கள் தானிருக்க வேண்டு மென்று அவ்விதம் செய்யாத பட்சத்தில் நான் ராஜிநாமா செய்ய விரும்புவதாகவும் எழுதியிருப்பது முற்றிலும் அக்கிரமமான செய்கையாகும். சங்கத்தின் நிர்வாகம் எல்லாம் கொஞ்சகாலமாக வெளியாரின்றி நாங்களே நடத்திவரும்போது இவர் இவ்வாறு கூறுவதானது வெளியூர்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் எங்களுக்கும் பிரிவு உண்டுபண்ணி, தான் பார்ப்பன ரயில்வே உத்தியோகஸ்தராயிருப்பதால் ஷை உத்தியோகஸ்தர் சங்கத்தோடு எங்கள் சங்கத்தையும் சேர்த்துவிட சூழ்ச்சி செய்கிறாரோவென ஐயுற வேண்டியிருக்கிறது. எனவே ஷை கூட்டத்தில் நடந்த விஷயங்களை அனைத்தையும் திருத்தி யெழுதியிருப்பதைப்பற்றி யார் ஜவாப்தாரியாவார்கள் என்பதை கவனித்து இம்மாதிரி திருத்திக்கூறும் நிருபர்களை விலக்கினால் இவ்வநீதி இனி நடைபெறாதென்பதையறிந்து பத்திராதிபர்கள் தங்கள் கடமை புணர்ந்து நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

த. கோவிந்தசாமி செட்டியார், தலைவர்.

விளக்குகின்றது. நான் இன்று ஸ்ரீமதி கோமளா மாளிகையைத் திறந்து வைக்கும் வைபவத்தை நடத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்றாலும் இடையிடையே காங்கிரஸ் குறித்தும் சிலவிஷயங்கள் பேசுவேன்.

ஸ்ரீமதி கோமளாவை நீங்களனைவரும் நன்கறிவீர்கள். இந்த அம்மாளுக்கு இருந்துவரும் செல்வாக்கையும் நீங்கள் நன்குணர்வீர்கள். இப்பெரியார் காங்கிரஸிற் சேருவதனால் இந்நகரில் காங்கிரஸிற்குப் பெருத்த ஆதரவேற்பட்டிருக்கிறது.. இந்த பெரியார் சுயராஜ்யக் கட்சிக்கு இயன்றவரை (சாதகமாக) பிரசாரம் செய்வதாகவும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். இவர்களுடைய தேசாபிமானம் மேலும், மேலும் பெருகவும், செல்வம் வளரவும், நீண்ட ஆயுளை நல்கவும் எல்லாம் வல்ல பார்த்தசாரதியை வேண்டுகிறேன்.

பெரியோர்களே! ஆங்கிலேயர்கள் இரட்டையாட்சி என்ற வார்த்தையைச் சொல்லிக்கொண்டு இந்தியப் பிரதிநிதிகளடங்கிய சபையின் ஆலோசனையை பெரட்டியே தாம் ஆளுவதாகப் பறை சாற்றி வருவதை நீங்களறிவீர்கள். சட்டசபைக்குச் செல்லுதல் கூடாதென்று காங்கிரஸில் ஓர் காலம் சத்தம் போட்டார்கள். பிரயோசனமில்லாதுபோயிற்று. குளத்தினிடம் கோபித்து குளிக்காதிருந்துவிடுவதா? ஆகவே தான் சுயராஜ்யக் கட்சியார் பெரும் பான்மையாக சட்டசபைக்குள் நுழைந்து அதிகார வர்க்கத்தை ஆட்டிவைக்கப்போகிறோம். முடிந்தால் ஒரு கை பார்ப்போம்; முடியாவிடில் வந்து விடுவோம். இரட்டை யாட்சியை ஒழித்துப்போடுவோம். அதன்மூலம் ஆங்கிலேயர் அநீதியை அந்நிய நாட்டாருக்கு அறிவித்துக் கொள்ளலாம். சுயராஜ்யக் கட்சியார் மதுக்கடைகளை நாட்டிலிருந்து ஓட்ட முயலுவார்கள். ஜனங்கட்கு நாளுக்குநாளும் நன்மையே செய்வார்கள். எங்கள் கட்சிக்கே பெருத்த ஆதரவு நாட்டில் இருக்கிறது. வெற்றி நிச்சயம். இந்த நல்லாவையே (இந்த அம்மாள் ஆதரவுகொண்டு) எங்கள் கையில் வைத்திருக்கிறோம். நீங்களும் இந்த சோதனைக் காலத்தில் ஒத்தாசை செய்து, முழக்கம் செய்து வெளிவந்த நமது வீர வசந்தராயர் கட்சிக்கே மறுபடியும் ஓட்டுக்கொடுத்து சுயராஜ்யத்தை அடைதல் வேண்டும்." என்று சொல்லி முடித்து மாளிகையைத் திறந்துவைத்தார்.

(தொடரும்.)

## மகாத்மாவினிடம் அருவருப்பு.

மகாத்மா காந்தியடிகளின் படம் ஒன்று செய்யார் தாலூகா போர்டு கட்டிடத்தில் வைக்க வேண்டுமென்ற தீர்மானமொன்று 31-5-26-ல் கூடிய செய்யார் தாலூகாபோர்டு கூட்டத்தில் ஸ்ரீமான் வாசுதேவ செட்டியார் அவர்களால் கொண்டுவரப்பட்டது. இதை ஸ்ரீமான்கள் சிவசாம்பய்யர், மகாதேவராவ் ஆகிய இருவரும் ஆக்ஷேபித்தனர். இத்தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டதில் இவ்விருவர் தவிர மற்றையோர் அனைவராலும் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

இத்தீர்மானத்தை ஆக்ஷேபித்த ஸ்ரீமான்கள் சிவசாம்பய்யர், மகாதேவ ராவ் ஆகிய இரு பிராமணரும் சுயராஜ்யக்கட்சியிலுள்ளவர்கள். எலெக்ஷனில் அபேக்ஷகராக நின்றபோது மகாத்மா பெயரைச் சொல்லி ஓட்டுப்பெற்று அப்பதவி யடைந்தனர். ஆனால் இப்பொழுது மகாத்மாவின் பேரில் அருவருப்பு அடைகின்றனர். இத்தகைய அபேக்ஷகர்களை நம்பின ஓட்டர்களின் செய்கை வருந்தத்தக்கதாகும்.

இனியாவது காந்தியடிகளின் பேர்கள் என்று சொல்லிக்கொண்டு ஓட்டுப்பெறிக்க வரும் சுயராஜ்யக் கட்சி அபேக்ஷகர்களுக்கும் ஏமாறாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று ஒரு தாலூகாபோர்டு மெம்பர் எழுதுகிறார்.

## தென் இந்திய ரயில்வே ஸ்டேஷன்களில் சாப்பாட்டு விடுதிகள்.

இதைப்பற்றி "குடி அரசு" பத்திரிகையில் இதற்குமுன் இரண்டொரு தடவை எழுதி இருக்கிறோம். தென் இந்திய ரயில்வே ஆலோசனைக் கமிட்டியாரும் ரயில்வே அதிகாரிகளுக்கு இதைப்பற்றி பல ஆலோசனைகள் சொன்னார்கள். பிராமணதிக்கம் நிறைந்த தென்னிந்திய ரயில்வே கம்பெனிக்கு யார்தான் சொல்லி என்ன பிரயோசனம்.?

தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனில் உள்ள இந்தியர் சாப்பாட்டு விடுதியை நாம் இவ்வாரம் பார்க்க நேர்ந்தது. அங்கு மாடியின்மேல் கட்டப்பட்டுள்ள இடத்தில் சமையல் செய்யும் பாகம் போக பாக்கியிடத்தில் நாலில் மூன்று பாகத்தை தட்டி கட்டி மறைந்து பிராமணர்களுக்கென்று ஒதுக்கிவைத்துவிட்டு நாலில் ஒரு பாகத்தை "சூத்திரர்," "பஞ்சமர்," மகமதியர், கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர் என்கின்ற பிராமணரல்லாதவருக்கென்று ஒதுக்கிவைத்து அதிலேயே எச்சிலை போடுவதற்கும், கைகழுவுவதற்கும் வாய் கொப்பளிப்பதற்கும் விளக்குமாறு, சாணிச்சட்டி, கூடைமுறம் வைப்பதற்கும், எச்சில் பாத்திரம், சமையல் பாத்திரம் கழுவுவதற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டு இவ்வளவு அசிங்கங்களுக்கும் இந்த இடத்தையே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளைப்பற்றி யாராவது கேட்டால், கேட்டவர்களை வகுப்பு துவேஷத்தை கிளப்புகிறார்கள். இது மிகவும் அற்பத்தனமானது என்று நமது பிராமணர்கள் சொல்லுகிறார்கள்; எழுதுகிறார்கள்; அத்தோடு மாத்திரமல்ல, அவர்கள் தயவில் பிழைக்கும் பிராமணரல்லாத பத்திராதிபர்களும் கூட ஒத்துப் பாடுகிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்து ரயில்வே கம்பெனிக்கு பணம் கொடுக்கும் ஜனங்கள் பெரும்பாலும் எந்த வகுப்பார்? அவர்களின் எண்ணிக்கையென்ன! நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேர் பிராமணரல்லாதாராயும் நூற்றுக்கு மூன்றுபேர் பிராமணர்களாயிருந்தும் உள்ள இடத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து பாகத்தை அவர்களுக்கு எடுத்துக்கொண்டு நூற்றுக்கு இருபத்தைந்து பாகத்தை நமக்குக் கொடுத்திருப்பதோடு அதிலேயே எச்சில், சாணிச்சட்டி, விளக்குமாறு முதலியவைகளையும் வைத்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் கைக்கு ராஜியபாரம் வந்துவிட்டால் இந்தப் பிராமணர்கள் பிராமணரல்லாதாருக்கு எங்கு இடம் ஒதுக்கிவைப்பார்கள். கக்கூசுக்கு பக்கத்திலாவது ஒதுக்கிவைப்பார்களா என்பதை "உரிமை பெரிதா, வகுப்பு பெரிதா" என்று பொய் வேதாந்தம் பேசி வயிறு வளர்க்கும் "உத்தம தேசபக்தர்களை" வணக்கத்துடன் கேட்கிறோம்.

### தமிழர்களே!

### இதில் எதை ஆதரிப்பீர்கள்?

பிராமணீயம் நாட்டைப் பாழாக்கும்.

தீண்டாமை மாற்றானுக் கிடங்கொடுக்கும்.

நெருங்காமை-தீட்டு-அறியாமையை வளர்க்கும்

கதர் ஆடை வறுமையைப் போக்கி ஒற்றுமையை உணர்த்தும்.

ரோஜா முத்தையா

# ஐயங்கார் கோஷ்டிக்கு ஆப்பு.

சர்ஜன் ஜெனரல்—நீர்ப்பாசான சீப் இஞ்சினிர் நியமனங்கள்.

## திரு. பி. வி. மாணிக்க நாயக்கர் புறக்கணிக்கப்பட்டார்.

## ஐயங்கார் மருட்டலுக்கு அஞ்சேன்.

திரு. எ. இராமசாமி முதலியார் பிரசங்கம்.

ஜஸ்டிஸ் கட்சியார் மீது ஐயங்கார் கோஷ்டியாரால் சுமத்தப்படும் பல குற்றங்களில் சென்னை சர்ஜன்ஜனரல் பதவிக்கு ஒரு இந்தியரை நியமிக்காமல் ஆங்கிலேயரை நியமித்திருக்கிறார்கள் என்பதும் ஒன்றாகும். அப்பதவியின் நியமன அதிகாரம் மந்திரிக்கு உண்டா என்பதைப்பற்றியும், நீர்ப்பாசான சீப் இஞ்சினியர் பதவிக்கு லாயக்கு மிகுந்துள்ள ஒரு பிராமணரல்லாதாரை நியமிக்காமல் சட்ட மெம்பரான பிராமணர் ஒருஆங்கிலேயரை நியமித்துள்ள விஷயத்தைப்பற்றியும், மகாத்மாவின் படம் கார்பரேஷன் மண்டபத்தில் வைக்க வேண்டுமென்று தீர்மானத்தைப் பற்றியும் தன்னை பயமுறுத்திவரும் மிரட்டுதல்களைப்பற்றியும் சமீபத்தில் சென்னை சௌந்திரிய மஹாலில் திரு எ. இராமசாமி முதலியார் பேசிய தன் சுருக்கம்:—

கனவான்களே! நான் இக் கூட்டத்திற்கு வரும்போது அரசியலில் ஊக்கங் கொண்டுள்ள சில பார்ப்பனரல்லாத இளைஞர்கள் பதில் அளிப்பதற்காக சில கேள்விகளை என்னிடம் தந்துள்ளார்கள். அவற்றுள் முதன்மையான கேள்வி சர்ஜன் ஜெனரல் பதவிக்கு கர்னல் சௌத்திரியவர்கள் தகுதியுள்ளவராயிருக்கும்போது வெளியிலுள்ள ஒருவரை நியமித்ததைக் குறித்தேயாகும். இந்தநியமனத்தைப்பற்றி "சுயராஜ்யா" பத்திரிகை மந்திரிகளை தூற்றுகிறது, ஆண்மையற்றவர்கள் என்றும் கேவலமாக எழுதுகின்றது. ஆனால் எந்தப் பத்திரிகையும் உண்மையை எடுத்துக்கூறவில்லை.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இந்திய வைத்திய உத்தியோக வர்க்கத்தில், லீவில் சென்றிருப்பவரைத் தவிர்த்து முதன்மையான உத்தியோகஸ்தராயிருப்பவர் கர்னல் சௌத்திரி அவர்களேயாகும். இவரை நியமிக்காது வெளியிலிருந்து வேறு ஒருவர் சர்ஜன் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். சீர் திருத்தச் சட்டப்பிரகாரம் வைத்திய இலாகா மாற்றப்பட்ட இலாகாவுக்குள்ளடங்கி முதன் மந்திரியின் அதிகாரத்தின் கீழ் இருந்தபோதிலும், இந்திய வைத்திய வர்க்கம் பாதி இராணுவ அம்சத்தை உடையதாயிருக்கின்றபடியால் அதை எந்த மகாணமும் தன்றாய் அடக்கி ஆள முடியாது. 1919-ம் ஆண்டில் சீர்திருத்தச் சட்டம் கொடுக்கப்பட்டபோது அதன் அதிகாரத்தை வகிப்பவர் எக்கக்ஷியாராயிருப்பினும் அவர்களைக்கட்டுப்படுத்தி இந்திய அரசாங்கக் கூட்டத்தில் சில தனித்த சட்டம் (டெவலியூஷன் ரூல்ஸ்) செய்யப்பட்டிருக்கிறது. அச்சட்டத்தின் இரண்டாம் விதிப்படி சில அதிகாரங்கள் இந்தியா மந்திரிக்கே உரியன. இதன்படி இந்திய வைத்திய இலாகா (I.M.S.) பிரதம உத்தியோகஸ்தரை சாஸ்வதமாய் நியமிக்கும் அதிகாரம் இந்தியா மந்திரிக்கே உண்டு. அதே பதவிக்கு தற்காலிகமாக சொல்ப காலத்திற்கு ஒருவரை நியமிக்கும் அதிகாரமட்டும் மந்திரிகளுக்குண்டு. ஆகவே சர்ஜன்ஜெனரல் பதவிக்கு ஒருவரைபெர்மனென்டாக நியமிக்கும் அதிகாரம் இந்தியா மந்திரிக்கும், அல்லது இந்தியா மந்திரி பெயரால் இந்திய அரசாங்கத்திற்கும், டெம்பரரியாக நியமிக்கும் அதிகாரம் மாகாண முதன் மந்திரிக்கும் உண்டு என்பது விளங்குகிறதல்லவா? மூலக்கொள்கைகள் இவ்வாறிருக்கும்போது குற்றங் கூறுபவர்கள் ஏனோ இதை மறைக்க வேண்டும்?

ஆக்டிங் சர்ஜன்ஜெனரலாக ஒருவரை நியமிக்க நேர்ந்த பொழுது, கனம் மந்திரி சந்தோஷத்துடன் அன்போடு கர்னல் சௌத்திரியையே நியமித்தார். தனக்குள்ள சொல்ப அதிகாரத்தைக் கொண்டு அதே பதவிக்குக் கர்னல் சௌத்திரி அவர்களையே பெர்மனென்டாக நியமிக்க முயன்றார். மேலும் அப்பதவிக்கு வெளியிலுள்ள ஒருவரை நியமிப்பது தனக்கு விருப்பமில்லை யென்பதைக் காட்ட இந்திய அரசாங்கத்திற்குக் கண்டனமும் அனுப்பியுள்ளார்: அதற்கு இந்திய அரசாங்கம் பதிலளிக்கும்போது இந்திய வைத்திய வர்க்கத்தினர்கட்கு 1896-ம் வருஷத்திலேயே அகில இந்திய ஜாப்தா ஏற்பட்டிருக்கிறதென்றும் அந்த ஜாப்தாவில் உள்ளபடிதான் கர்னல்சைமன்ஸ் சர்ஜன் ஜெனரலாய் நியமிக்கப்பட்டார் என்றும் எழுதியிருக்கிறது. கர்னல் சௌத்ரி அந்த ஜாப்தாவில் 40தாவதாக இருப்பதால்சௌத்ரிக்கு முன் 39பேர் அப்பதவிக்குலாயக்குள்ளவர்களாகயிருக்கிறார்கள்.

இது விஷயமாய் மந்திரிகளைக் குறை கூறித் திரிபவர்கள் இந்த அடிப்படையான உண்மைகளை உங்களுக்குக்கெடுத்துரைக்கவில்லை. எல்லாம் தெரிந்ததாய்ப் பாவிக்கும் பத்திரிகாசிரியர்களுக்கு இவ்வுண்மைகள் தெரியுமா? "ஸ்ரீமான்" ஐயங்கார் மந்திரியாயிருந்தால் இதில் என்ன செய்ய முடியும்?


### சீப் இஞ்சினியர் பதவி.

சர்ஜன் ஜெனரல் பதவியைப் போன்ற முக்கியமான—ஏன்? அதைவிட பிரதானமான நீர்ப்பாசான சீப் இஞ்சினியர் பதவி ஒன்று சமீபத்தில் காலியாயிற்று. இதன் நியமனத்திற்கு டெவலியூஷன் ரூல்கள் போன்ற தனிச்சட்டம் கிடையாது. மற்ற எல்லோரையும் விட ஸ்ரீமான் மாணிக்க நாயக்கர் இப்பதவிக்கு எல்லா வகையிலும் தகுதியுடையவர். இப்பொழுது உள்ள இஞ்சினியர்இலாகாவில்இருப்பவர்களுக்குள் சீனியராக (முதன்மையானவராக) யிருப்பவரும் ஸ்ரீமான் நாயக்கரேயாகும். ஆனால் இந்த நீர்ப்பாசன சீப் இஞ்சினியர் பதவிக்கு ஸ்ரீமான் நாயக்கரை நியமிப்பதற்குப் பதிலாக ஒரு ஐரோப்பியர் நியமிக்கப் பட்டுள்ளார். இந்நியமனத்தைப்பற்றி பார்ப்பன பத்திரிகைகள் ஏதாவது எழுதினதா? எல்லாம் தெரிந்ததாய்க்கூறும் "சுயராஜ்யா" "இந்து" "சுதேசமித்திரன்" பத்திராதிபர்களுக்கு இது தெரியாதோ? ஸ்ரீமான் நாயக்கரின் நியாய உரிமையைப் புறக்கணித்ததைப் பற்றி அப்பத்திரிகைகள் ஏதாவது ஒரு குறிப்போ, கண்டனமோ எழுதியதுண்டா? இல்லையே. இதன் காரணம், பாவம்!, ஸ்ரீமான் நாயக்கர் பிராமணரல்லாதாராயிருப்பதும், அப்பதவிக்கு நியமனம் செய்யும் அதிகாரம் பிராமண சட்டமெம்பர் கையில் இருப்பதுமேயாகும். அல்லது அவர்சென்னை மாகாணத்திலேயே பிறந்து வளர்ந்ததினால் அந் நியமனத்திற்கு அவர் லாயக்கில்லாதவராய் விட்டார்போலும்.

மகாத்மா காந்தியின் உருவப்படம் தயாரித்து கவுன்கில் மண்டபத்தில் வைப்பதற்கு கார்ப்பரேஷன் பணத்திலிருந்து செலவு செய்ய மந்திரி அனுமதிக்கவில்லை யென்று பெரிய கூக்குரலும் சூற்றமும் கிளப்பப் படுகிறது. மந்திரிகளுக்கு ஸ்தலஸ்தாபனங்களின் பணச்செலவில் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தலோ விருந்து நடத்தலோ கூடாதென்று ஒருதடவைக்கு இருதடவை 3, 4 வருஷங்களுக்கு முன் மந்திரியே உத்திரவிட்டிருக்கும்போது, கார்ப்பரேஷன் பணத்தைச்செலவு செய்து படம் தயாரிப்பதை மட்டிலும் எப்படி அங்கீகரிக்க முடியும்? முனிசிபல் சபைப்பணத்திலிருந்து பிறருக்குப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவாவது விருந்து நடத்தவாவது கூடாது என்று ஸ்ரீமான் கொண்டா வெங்கட்டப்பய்யாவே சொல்லியிருக்கிறார். முனிசிபல் சட்டத்திலும் அப்படித்தான் இருக்கிறது. காஞ்சீவரம் போன்ற அநேக முனிசிபல் சபைகளில் மகாத்மா காந்தி, தாஸ், தியாகராய செட்டியார் முதலியவர்களின் படங்கள் அந்தந்த சபை அங்கத்தினர்களுடைய செலவிலேயே வைக்கப் பட்டிருக்கின்றன. சென்னையிலும் ஏன் அவ்விதம் செய்யக் கூடாது? இன்று மகாத்மாவின் படத்திற்குப் பணம் செலவிட அனுமதித்தால், பின்னால் எத்தனையோ பேர்களின் படத்திற்குப் பணஞ்செலவிட அனுமதிக்க நேரிடும். படங்கள் தொங்கவிடுவதற்கெல்லாம் கார்பரேஷன் பணத்திலிருந்து செலவுசெய்யக் கூடாதென்ற உத்தரவு கார்பரேஷன் தலைவரின் ஆபிசிலும் இருக்கின்றது. எல்லாம் தெரிந்தும் வேண்டுமென்றே அவர்கள் இவ்விதம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு மந்திரிகள் அனுமதிக்காததால் மந்திரிகளுக்கு திடமான நோக்கமில்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு சமயம் ஸ்ரீமான் சீனிவாச அய்யங்கார் மந்திரியாக வந்தால் தன் மனதிற்கும் கண்ணுக்கும் நேர்த்தியாய் இருப்பனவற்றையெல்லாம் செய்வார் போலும்.

(இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-௵ வைகாசி-மீ 24-உ


## வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.

---o---

### I

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி திருச்சி-லால்குடியில் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையின்கீழ் ஒரு பிரசங்கம் செய்ததாக ஜுன் முதல் தேதி "மித்திரனி"ல் 'வகுப்பு வேற்றுமையின் கேடுகள்' என்ற தலைமையின்கீழ் பத்தி பத்தியாக எழுதப்பட்டிருக்கிறது. அவற்றில் அவர் சொல்லும் ஆக்ஷேபனைகளாவன:—

1. இந்தியாவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவமானது லார்ட் மிண்டோ, காலஞ்சென்ற கோகலே இவர்களுடைய ஆலோசனையால் எற்பட்டது,—

2. முகமதியரைப் பிரீதி செய்ய வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் இறங்கிவிட்டார்கள்,—

3. கோகலே ஒப்புக்கொள்ளாதிருந்தால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டிருக்காது,—

4. வகுப்புவாரியை லார்ட் மிண்டோ ஒப்புக்கொண்டதற்கு லார்ட் மார்லி கோபித்துக்கொண்டிருக்கிறார்,—

5. இதனால் ஒவ்வொருவரும் தன் தன் வகுப்பு நலனை நாடுகிறார்களே அல்லாமல் சமஸ்தானத்தின் சார்பாக பற்றைக்காட்டுவதில்லை,—

6. சில்லரை வகுப்பினர் கிராம யூனியன் முதற்கொண்டு, ராஜாங்க சபை வரை ஒவ்வொன்றுக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோருகிறார்கள்,—

7. கவர்ன்மெண்டு நிர்வாக சபையில் கூட வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கத் தயங்கவில்லை —

8. இவர்களை திருப்தி செய்வதென்றால் சென்னைக்குமாத்திரம் ஆயிரம் நிர்வாக சபை மெம்பர் ஸ்தானம் வேண்டும்,—

9. லக்ஷ்மணபுரியில் வகுப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. காங்கிரஸ் தைரியமில்லாததால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு உடன்பட்டார்கள்,—

10. மாண்டேகு, செம்ஸ் போர்ட் இருவரும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாயிருந்தாலும் அதிகார வர்க்கம் அவ்விதமிருக்க மாட்டார்கள்,—

11. ஏனென்றால் அவர்கள் அதைக் கொண்டுதான் இங்கு நீடித்து இருக்கிறார்கள்,—

12. இந்துக்களும் முஸல்மான்களும் தங்கள் வகுப்பை எண்ணாமல் ஒன்றுபட்டால் அரசாங்க எதேச்சாதிகாரம் ஒழிந்துபோய் விடும்,—

13. தற்சமயம் இத்தேசத்தில் நடக்கும் வகுப்பு மகாநாடுகள் நடப்பதைப் பார்த்தால் அரசாங்க விஷயமாக யார் என்ன நினைக்கிறார்கள் என்றே தெரியவில்லை,—

14. ஒவ்வொரு வகுப்பும் பிரிந்து பல உப வகுப்புக்களாய் போவதைப்பார்த்தால் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு எல்லையில்லாமல் போய்விடும்,—

15. இதனால் சட்ட சபைகள் வகுப்புக் காகூதி சாலையாக முடியும்,—

16. இதோடு நிற்காமல் உத்தியோகங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் கல்வி போர்டுகளிலும் பிரதிநிதித்துவம் கேட்பார்கள்,—

17. உத்தியோகம் பெற்றால் பெற்றவருக்கு நன்மையே தவிர வகுப்புக்கு என்ன நன்மை,—

18. 100-க்கு 5 பேருக்குமேல் உத்தியோகம் கொடுப்பது சாத்தியப்படாது,—

19. ஒவ்வொரு வகுப்பைச்சேர்ந்த உத்தியோகஸ்தரும் தங்களுடைய வகுப்புக்கு என்ன செய்வதென்று எண்ணுவார்களே தவிர தேசத்தை கவனிக்கமாட்டார்கள்,—

20. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வகுப்பார் எத்தினைபேர் உத்தியோகம் பார்க்கிறார்கள் என்கிற கணக்குப் பார்ப்பதிலேயே இருப்பார்களே ஒழிய தேசத்தை கவனிக்கமாட்டார்கள்,—

21. ஸ்தல ஸ்தாபனம், கல்வித்துறை முதலியவற்றிற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அனாவசியம்,—

22. தாழ்ந்த வகுப்பிற்கு நியமனமாகிறதே என்பதை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்,—

23. ஆனால் அவர்கள் விஷயத்தில் ஓட்டுரிமையை தாராளமாக்கி இதரத் தொகுதிக்கு சமமாய் தேர்தல் நடத்துவது நலம்,—

24. ஓட்டர் ஜாப்தாவில் 100 ஓட்டர்கள் இருந்து அவர்களில் 25 பேர் ஆதிதிராவிட ஓட்டர்களாயுமிருந்து அவர்களும் பேட்டைக்கு ஐவாக பரவியுமிருந்தால் அந்த பேட்டைகளுக்கு தெரிந்தெடுக்கும் மற்ற வகுப்பார்கள் ஆதித்திராவிடரின் நன்மையை கவனித்துக்கொள்ளுவார்கள். 125; ஆதித்திராவிடருக்கு ஒரு ஆதித்திராவிட பிரதிநிதியைவிட இந்த ஐந்து வேறு வகுப்பு பிரதிநிதிகள் நல்ல வேலை செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை,—

25. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்தால்தான் இவ்வித நன்மை ஏற்படக்கூடும்,—

26 சட்டசபை விஷயத்தில் முஸல்மான்களுக்கும் பிரத்யேகப் பிரதிநிதித்துவம் இருந்துவருகிறது. ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் தனிப்பிரதிநிதித்துவம் பெற்று இருக்கிறார்கள்,—

27. கிறிஸ்தவர்களைப் பற்றிய வரையில் அவர்களில் புத்திசாலிகளான கே. டி. பால் முதலியவர்கள் வகுப்புவாரியை கண்டிக்கிறார்கள்,—

கல்வியில் சிறந்ததும் முன்னேற்றமடைந்ததுமான இவ் வகுப்பினர் பொதுத் தொகுதியில் தேர்தலில் நிற்க பூரண சம்மதமாயிருக்கிறார்கள்.

28. சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் திறமை வாய்ந்த தலைமையின் கீழ் இந்துக்கள் பிரதானமாயுள்ள பேட்டைகளில் முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் நிறுத்தி வெற்றிபெற்றிருக்கிறோம்,—

29. ஐரோப்பியர் மிகவும் சொல்ப தொகையினரானதாலும் கவர்ன்மெண்டு ஐரோப்பிய கவர்ன்மெண்டானதாலும் அவர்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் அவசியம்.—

30. ஆங்கிலோ இந்தியர்களில் நல்ல புத்தியுள்ளவர்கள் நம்மோடு சேர்ந்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள்,—

31. முஸல்மான்களுடைய பாஷை, மத வித்தியாசத்தை உத்தேசித்து அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கலாமா என யோசிக்கலாம். ஆனால் 20 வருஷமாய் கொடுத்து இதுவரை ஒரு நன்மையும் ஏற்படவில்லை,—

32. நான் சட்டசபையிலிருந்த 3 வருஷத்திலும் வகுப்பு பிரசினை வந்ததே கிடையாது. ஜஸ்டிஸ் மந்திரிகள் சில சமயங்களில் வேண்டுமென்றே வகுப்பு பிரசினையாக்கிக் கொண்டு வந்ததுண்டு,—

33. வட இந்தியாவிலுள்ள இந்து முஸ்லீம் சச்சரவுகள் வகுப்புவாரி உரிமைக்கு ஏற்பட்டதல்ல. வகுப்புரிமை பெற்றதனால் ஏற்பட்டது,—

34. மகமதலி, ஜின்னா, பண்டித மாளவியா ஆகிய இவர்கள் அல்ப வகுப்புப் பெருமையை பாராட்டி நிற்கிறார்கள். சர். அப்துல்ரஹிம் புதிதாக இந்த கோஷ்டியில் கலந்திருக்கிறார்,—

35. இம் மாகாணத்தில் 50 ஆயிரம் வகுப்பினருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்கின்ற ஒரு போலி பிரதிநிதித்துவம் இருந்து வருகிறது,—

36. வகுப்புவாரி பிரதிநிதித்துவமென்பது 100-க்கு 3 பேரடங்கிய ஒரு வகுப்பினரை நிர்மூலமாக்கவும், அவர் கழுத்தை மற்றவர் அறுக்கவும் ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை,—

37. கூர்ஜ்ஜரத்தார் மகாத்மா காந்தியை கொடுத்திருக்கிறார்கள். வங்காளத்தார் அரவிந்தரையும், தாகூரையும் கொடுத்திருக்கிறார்கள். தென்னிந்திய பிராமணர் தேசவிடுதலைக்காக தியாகம் செய்துள்ள ஸ்ரீமான் எஸ் சீனிவாசய்யங்காரை அளித்திருக்கிறார்கள்,—

#### நமது பதில்

இந்த விஷயங்கள் பதில் சொல்ல வேண்டிய அவ்வளவு அவசியமில்லாதவென்றே சொல்லலாம். ஏனென்றால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பேசியிருப்பதிலிருந்தே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் அவசியம் விளங்குகிறது

1-2-3வது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் காலஞ் சென்ற கோகலேயின் ஆலோசனையினால் ஏற்பட்டது என்று இவர் சொல்லுகிறார். இதன் நன்மை தீமைகளை பகுத்துணர கோகலேயைவிட இந்தியாவிலேயே வேறு ஒருவர் இருந்தார் என்று யாராலும் சொல்ல முடியாது. மகாத்மாவுக்கும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கும் இந்தியாவிலேயே யோக்கியமான பிராமணன் இல்லை என்கிற வாதம் நிகழ்ந்த போது அதுசமயம் மகாத்மா "ஒருவர் கூட இல்லை என்று சொல்லக்கூடாது, நான் ஒரு யோக்கியமான பிராமணனைப் பார்த்திருக்கிறேன், அவர்தான் கோகலே" என்று சொன்னதோடு, அதற்குப் பல உதாரணங்களையும் சொல்லி மனிதர்களில் அவருக்கு மேம்பட்ட மனிதனைத்தான் பார்த்ததில்லை என்று சொன்னார். இது சில தென்னாட்டு பிராமணர்களையும் வைத்துக் கொண்டுதான் சொன்னார். இப்பேர்பட்ட ஒரு உத்தம பிராமணராலும் உத்தம தேசபக்தராலும் கொஞ்சமும் சுய நலமற்ற தியாகியாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும், கலியாணசுந்தர முதலியாரும், குழந்தையும், ஜனாப்கள் அமீத்கானும் ஷாபியும், ஸ்ரீமான் ஜெயவேலும் எந்த விதத்தில் யோக்கியதை உடையவர்கள் என்பதை வாசகர்களே யோசித்து பார்க்க வேண்டும். கோகலேயிக்கு இல்லாத தேசபக்தியும், ஒற்றுமையும், சுயராஜ்யமும், விடுதலையும், சுதந்திரமும், இவர்களுக்கு உதயமாகி விட்டதா? இந்தக் குழாத்தில் இருப்பவருள், மகாத்மாவினால் தியாகத்திற்கு அழைத்த காலத்தில் உத்தியோகம் விட்டவர்கள் யார்? கோர்ட்டை பகிஷ்கரித்தவர்கள் யார்? ஜெயிலுக்குப் போனவர்கள் யார்? பொருள் நஷ்டமடைந்தவர்கள் யார்? மகாத்மா சொன்னபடி ஏதாவது ஒரு காரியம் செய்தவர்கள் இதில் யார் இருக்கிறார்கள்? ஆதலால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்கு கோகலேயைவிட இனி வேறு எவர் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

4-வது, லார்ட் மிண்டோ ஒப்புக்கொண்டதைப்பற்றி லார்ட் மார்லி கோபித்துக் கொண்டார் என்கிறார்,—

இந்தியாவுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்தால் அவர்களுக்குள் உள்ள கக்ஷிச்சண்டைகள் அடங்கி விடும், எல்லோரும் ஒன்று சேர்ந்து விடுவார்கள்; எப்படி என்றால் ஆளுக்கு ஒரு இலைபோட்டு சாப்பாடு போடாமல் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொள்ள முடியாது; மொத்தமாய் அவர்கள் முன்னால் கொட்டி விட்டால் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு கையில் பலத்தவன் காரியமாகிவிடும் அப்பொழுது நமக்கு இவர்களை அடக்கியாள ஆளும் சேரும்; சௌகரியமாயும் இருக்கும், என்கிற எண்ணத்தின்பேரில் மார்லி பிரபு கோபித்துக்கொண்டார். அப்படிக்கில்லாமல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொல்வது போல் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இந்தியரை நிரந்தரமாய்ப்பிரித்து வைத்துவிடுமென்று இருக்குமேயானால் அன்னிய அரசாங்கத்தார் உடனே கொடுத்துவிட்டு மறுவேலை பார்ப்பார்கள். இதனால் ஒருவருக்கொருவர் ஏற்படும் சச்சரவை ஒழித்துவிடும், ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்று நினைத்துதான் மார்லி கோபித்ததும், அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ள மறுப்பதும் என்பதை வாசகர்கள் இதிலிருந்தே உணர்ந்து கொள்வார்கள்.

5வது ஒவ்வொரு மனிதனும் வகுப்பு நலனை நாடுவானேயல்லாமல் சமஸ்தானத்தின் சார்பாகப் பற்றுக்காட்டமாட்டான் என்கிறார்.

இதில் சமஸ்தானம் என்பதும் நமக்குப் புரியவில்லை. அது திருட்டு வார்த்தையாயிருக்கிறது. அரசாங்கத்தாரை நோக்கி இந்தியர்களுக்கு வகுப்பு உரிமை கொடுக்கவேண்டாம், கொடுத்தால் உங்களிடம் பற்று இருக்காது, தங்கள் காரியத்தில் ஜாக்கிரதையாயிருப்பார்கள் என்று சர்க்காருக்கு உள் ஆளாயிருந்து எச்சரிக்கை செய்வதாயிருக்கிறது.

முதலாவது மனிதன் தத்தம் வகுப்பைத்தான் கவனிக்க வேண்டும். எல்லா வகுப்புகளும் தன் வகுப்பை சீராக்கிக்கொண்டால் எல்லா வகுப்புக்களையும் கொண்ட தேசம் உடனே சீராய்விடும். அதில்லாமல் பல வகுப்பாய் இருந்துகொண்டு ஒரு வகுப்பாரை மற்றொரு வகுப்பார் ஏமாற்றிக்கொண்டிருக்கும்வரை எப்படி ஒற்றுமை ஏற்படும்? எப்படி விடுதலை ஏற்படும்? என்பதை வாசகர்களே கவனிக்க வேண்டுகிறோம். ஒரு தேசத்தின் வெள்ளாமைக்கு தண்ணீர்பாய்ச்சுவதனால் அந்தத் தண்ணீர் தோட்டத்தில் உள்ள சகல பாகத்திற்கும் தண்ணீர் போய்ச் சேரும்படியிருந்தால் நல்ல விளைவு உண்டாகும். அப்படிக்கில்லாமல் சிற்சில பாகத்திற்கு தண்ணீர் போய்ச்சேர வழியில்லாமல் தடங்கலாயும், மேடாயும் இருக்க தண்ணீர் பாய்ச்சலினால் பலபாகம் வரண்டுபோவதோடு அதிக தண்ணீர் கொண்டபாகத்தின் வெள்ளாமை மாத்திரம் சில சமயங்களில் நன்றாய் விளைந்தாலும் சிலசமயங்களில அழுகிப்போகும். அதுபோல் அரசாங்கத்தின் மூலம் பெரும் உரிமையாகிய தண்ணீர் பல வகுப்பு ஜனங்களாகிய தோட்டத்திற்கு சமமாய்ப் பாயும்படி ஏற்பாடு செய்து கொள்ளவேண்டியது முதலாவ தவசியமானதாகும்.

6-வது, சில்லரை வகுப்பும் பிரதிநிதித்துவம் கோருகிறார்கள் என்கிறார். சில்லரை வகுப்பார்களும் மனிதர்களா, அல்லவா? இந்தியர்களா, அல்லவா? அவர்களுக்கும் மற்றவர்கள் அனுபவம் கோரபாத்தியமுண்டா, இல்லையா? உண்டு என்று ஒப்புக்கொள்வதானால் அவர்களுக்கும் வீதாசார உரிமை கொடுக்கத்தான் வேண்டும். எப்படி கொடுப்பதென்பதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. கொடுக்கசம்மதித்தால் வழி தானாய்த் தென்படும்.

7-வது, கவர்மெண்டு நிர்வாக சபையிலும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவமா என்கிறார்,— ஆம், அங்கும் பிரதிநிதித்துவம் கேட்டதால்தான் முஸ்லீம்களுக்காக டாக்டர் மகமது உஸ்மானுக்கு ஒரு ஸ்தானம் கிடைத்தது. இல்லாவிட்டால் இந்த பிராமணர்கள் கொடுக்க சம்மதிப்பார்களா? வகுப்புரிமை கேட்பதற்கு முன் அந்தஸ்தானங்கள் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யர், சிவசாமி அய்யர், ராஜகோபாலாச்சாரி என்கிற பிராமணக் கூட்டத்திற்குத் தானே ஏக போகமாய் இருந்தது? ஆகையால் இதைக் கேட்டதில் என்ன தப்பு?

8. இம்மாதிரியானால் சென்னைக்குமாத்திரம் ஆயிரம் நிர்வாக சபை மெம்பர் பதவி வேண்டும் என்கிறார். ஆயிரம் நிர்வாகசபை பதவிகள் வேண்டியதில்லை. சம்பளம் 5,333-5-4 வாகயிருப்பதால் அதிகம்தேவையிருப்பதாயும், அதிகமாக்க முடியாததாயும் தோன்றுகிறது. சம்பளத்தையும் போக்கியத்தையும் குறைத்து சரியான பொறுப்பை வைத்து நிர்வாக சபையை சட்டசபைக்குள் கட்டுப்படுத்தி விட்டால் அந்த இடத்தில் வகுப்பு பிரிவினைக்கு இடமில்லை. இன்னமும் கொஞ்சம் அதிகமான நிர்வாக சபை மெம்பர் பதவிகளும் உயரும். அப்பொழுது அதில் ஒன்றும் கஷ்டமிருக்காது.

9-வது லக்ஷ்மணபுரி காங்கிரசுக்கு தைரியமில்லாததால் வகுப்பு உரிமையை ஒப்புக்கொண்டது என்கிறார். இதிலிருந்து காங்கிரஸ் வகுப்புரிமை ஒப்புக்கொண்டது நிஜம் என்று ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது லக்ஷ்மணபுரிகாங்கிரஸ்காரரைவிட ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் இவர்களுடைய காங்கிரசுக்கு அதிக தைரியமிருப்பதால் ஸ்ரீமான்கள் முதலியார், குழந்தை, ஜயவேலு, ஹமீத்கான், ஷாபி முதலிய கனவான்களோடு எதிர்த்து நிற்கிறார்கள் என்பதும் புலனாகிறது. தமிழ் நாட்டு மக்கள் இந்தத் தலைவர்கள் தைரியத்தையும், அவர்களின் கணங்களின் வீரத்தையும் ஒருகை பார்க்கத்தான் போகிறார்கள். இவர்கள் தைரியத்தாலும், வீரத்தாலும் வகுப்புரிமை மறைந்து போகிறதா அல்லது நிலை நிற்கப் போகிறதா என்பதே பின்னால் பார்க்க இருக்கும் தத்துவம்.

10, 11, 12-வது மாண்டேகு, செம்ஸ்போர்ட் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாயிருந்தாலும் அதிகார வர்க்கம் அவ்விதமிருக்காது என்கிறார். இது பொருளற்ற சொல்லாயும் முன்னுக்கு பின் முரணாயுமிருக்கிறது. மாண்டேகு, செம்ஸ்போர்ட் என்றால் அவர்கள்யார்? அதிகாரவர்க்கம்என்றால் அவர்கள்யார்? வகுப்புவாரிபிரதிநிதித்துவம் கொடுத்தால் வகுப்பு சச்சரவு உண்டாகும், அதனால் தாங்களும் நீடித்திருக்கலாம் என்பது வாஸ்தவமானால் அதிகார வர்க்கம் உடனே கொடுத்துவிடாதா? மாண்டேகு செம்ஸ்போர்ட் உள்பட்ட அதிகாரவர்க்கம் ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். கோக்கலேயின் பிடிவாதத்தின்மேல் கொஞ்சம் மாத்திரம் கொடுப்பானேன். பாக்கியும் கொடுத்தால் சர்க்கார் தயவை யாரும் எதிர் பார்க்கமாட்டார்கள்; எல்லோரும் சேர்ந்து சர்க்கார் மேல் பாய்ந்து விடுவார்கள் என்று பயந்துகொண்டே வகுப்புக்கு வகுப்பு பொறாமைப்படவும் முட்டவிடவும் ஒருவகுப்புக்கு அதிக உரிமையும்மற்றொரு வகுப்புக்கு ஒன்றுமில்லாமலும் செய்கிறார்கள்.

இவ்வாரம்—இந்த 12 விஷயங்களுக்கு மாத்திரம் பதிலெழுத இடம்கிடைத்தது. அடுத்த வாரம் மற்றும் பாக்கி 5 விஷயங்களுக்கும் ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியார் அவர்கள் தனது "நவசக்தி"யில் 'தேசபக்தி' என்றெழுதிய 5 கலத்திற்கும் பதில் எழுதுவோம்.

## திருவாங்கூரில் பத்திரிக்கைச் சட்டம்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் கொஞ்சகாலமாக சில புதுமைகள் நடந்து வருகின்றன. அவற்றுள் அரசாங்கம் சமீபத்தில் பத்திரிக்கைகள்மீது தொடுத்துள்ள பாண முறையும் ஒன்றாகும். திருவாங்கூர் சமஸ்தானத்துக்குத் தாய் அரசாங்கமாய் விளங்கும் இந்திய அரசாங்கத்தில்கூட இத்தகைய சட்டம் இது சமயம் இல்லையென்றே சொல்லாம்.

இப்பொழுது செய்துள்ள சட்டப்படி திருவாங்கூர் சமஸ்தானத்தில் பத்திரிகை நடத்துவோர் ஜாமீனாக முதலில் ரூபாய் 500 கட்டவேண்டும். பத்திரிகையில் ஏதாவது குற்றங்காணப்பட்டால் ஜாமீன் தொகையான ஐநூறு ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். அதன் பிறகு அப்பத்திரிகை நடைபெறவேண்டுமானால், அரசாங்கம் சம்மதித்தால், ரூ 2,500 ஜாமீன் கட்டவேண்டும். மறுமுறையும் குற்றங்காணப்பட்டால் அத்தொகை பறிமுதலாவதோடு பத்திரிக்கையும் அழிந்தொழிய வேண்டியதுதான். இதுவே இப்பொழுது திவானாகயிருந்து லீவின் பேரில் சென்றிருக்கும் திவான் வாட்ஸ் துரை மகனாரின் பெரு முயற்சியால் பிரயோகிக்கப்பட்ட அருமையான சட்டம்.

சுதந்திரத்தையும் உரிமையையும் நோக்காகக் கொண்டே பத்திரிகை நடத்தப்படுவதாகும். பத்திரிகை நடத்த வேண்டிய உரிமையையும் சுதந்திரத்தையும் பறித்து விட்டால் அப்பத்திரிக்கை நடந்தென்ன? நடக்காமல் அழிந்தென்ன? ஆட்சி முறையில் குற்றங்கண்ட விடத்துக்கடிந்தும், குணங்கண்ட விடத்துப்போற்றியும் வருவதே பத்திரிக்கையின் இயல்பு.

"இடிப்பாரை இல்லாத வேமாரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும்"

என்னும் தமிழ் வேதப்படி, குற்றங் கண்ட விடத்தில் இடித்துக் கூறும் அமைச்சன் இல்லாவிட்டால், கெடுப்பான்இல்லாவிட்டாலும் அரசன் கெடுவான் என்பதைப்போல, குற்றங் கடிந்துக் குணம் புகழ்ந்தும் பேசும் பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டிடுதல் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கே அவமானமாகும்.

இதை உணர்ந்து மேன்மை தங்கிய ரீஜண்ட் மகா ராணியார் இந்த புதிய பத்திரிகைச் சட்டத்தை ரத்து செய்வதே கண்ணியம் பொருந்திய செயலாகும். இல்லாக்கால், தன்னுடைய பிரஜைகள் தன் ஆக்கினையை மீறி சிறை செல்வதால் தானே பணிந்து வாபஸ் பெறவேண்டிய நிலை சம்பவிக்கும் யென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அல்லாமலும் இது தற்காலம் ஆட்சி செலுத்தும் ரீஜண்ட் மகாராணியாரிடம் நாம் எதிர்பார்த்த குணங்களுக்கு முற்றும் விரோதமாயிருக்கிறது. அமைதியாகவும் குடிகள் விரும்பும் முறைப்படியும் ஆட்சி செலுத்தவேண்டியது நல்லரசின் முறை. அப்படிச்செலுத்தமுடியாவிட்டால்தன்னிடம்பிரஜைகள் நல்லபிப்பிராயம்கொண்டுள்ளஇக்காலத்திலேயே ரீஜண்ட் பதவியிலிருந்து விலகி வேறு ஒருவரிடம் ஒப்புவித்து பழிபாவங்களிலிருந்து தப்புவித்துக்கொள்வதே நல்லது. இல்லாவிட்டால் இவ்வாறான கொடுங்கோலாட்சிக்குத் தன்னைப் பாத்திரமாக்கிக்கொள்வது புத்திசாலித்தனமாகாதென்றே சொல்லுவோம்.

இனி திருவாங்கூர் பிரஜைகள் இக்கொடுமையைச் சகித்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. அரசாங்கம் மூர்ச்சையடைந்து திணரும்படி செய்தல் வேண்டும். அரசாங்கம் ஒத்து வராவிட்டால் அரசாங்கத்திற்கு (டிபாசிட்டு) ஜாமீன் தொகைகட்டாமலேயே ஒவ்வொருவரும் பத்திரிகைகள் வெளியிட முன் வரவேண்டும். அதனால் அரசாங்கத்தார் கைது செய்வரேல் ஜெயிலுக்குப் போகத் தயாராயிருக்கவேண்டும். இப்படியே ஒவ்வொரு நாளும் தினம், 10, 20-பத்திரிகைகள் வீதம் ஆரம்பித்து, அதனால் உறுதியுடன் தினம் 10, 20பேர் ஜெயிலுக்குப்போய் ஜெயிலை நிரப்பிக் கொண்டேயிருந்தால் அப்பொழுது அரசாங்கம் தானே பணிந்துவிடும் என்று திருவாங்கூர் பிரஜைகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்

## பிராமணப் பத்திரிக்கைகளின் அயோக்கியத்தனம்.

—(o)—

நம் நாட்டு பிராமணப் பத்திரிக்கைகளும் அதன் பிராமண நிருபர்களும் செய்துவரும் அயோக்கியத்தனங்களைப் பற்றி நமது பத்திரிக்கையில், கடுகளவு சுத்தரத்தம் உள்ளவர்களுக்கும் இனி இம்மாதிரி நடக்காமலிருக்கும்படியும்மானம்வெட்கம்வந்து திரும்படியும் பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். அநேக கூட்டங்களிலும் நன்றாய்ப் படும்படி பேசியும் வந்திருக்கிறோம். வேறொரு கூட்டத்தாராய்இருந்தால், ஒன்று யோக்கியர்களாகி இருப்பார்கள், அல்லது தற்கொலையாவது புரிந்துகொண்டிருப்பார்கள். ஆனால் என்னசொன்னாலும்,தங்கள் காரியமானால் போதும் என்கிற எண்ணத்தின்பேரில் மற்றவர்களை எப்படியாவது ஒழித்து, வயிறுவளர்ப்பதற்கு மனுஷ சுபாவத்தையே உதரிவிட்டு மேலும், மேலும் அயோக்யத்தனமான காரியங்களையே செய்து வருகிறார்கள். இந்த மானமற்ற கூட்டத்தை நமது நாட்டில் இப்படியே வைத்துக்கொண்டு நாம் எப்படி விடுதலையடையமுடியும்? ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் நாகை தொழிலாளர்கள் கூட்டத்தில்பேசியவற்றைப்பற்றி "இந்து" "சுதேசமித்திரன்" பத்திரிக்கைகள் அதன் நிருபர்கள் எழுதுகிறார்கள் என்று எழுதியிருப்பதானது வேண்டுமென்றே எழுதியிருக்கும் அயோக்கியத்தனமானஎழுத்துக்களாகும். நல்லஜாதியான்களாயிருந்தால் நாயக்கர் பேசியவற்றை எழுதி அதற்கு தகுந்தமறுப்புகளை எழுதும். அப்படிக்கில்லாமல் பாமர ஜனங்களை ஏமாற்றிப்பிழைக்கிற ஜாதியானதால் பேசியவைகளையும்விட்டு, நடந்த விஷயங்களையும்விட்டு நடக்காததை எழுதி வயிறுவளர்க்க ஆசைப்படுகிறது. அக்கூட்டத்தின்முடிவில் சங்க உதவி அக்கிராசனர் எழுந்து ஸ்ரீமான் நாயக்கரின் அபிப்பிராயந்தான் தனது அபிப்பிராயமென்றும் இவ்வருஷம் சங்க ஆண்டு விழாவுக்கு ஒரு தொழிலாளரையே அக்கிராசனராய் தெரிந்தெடுக்கப் போவதாயும், ஆனால் சங்கத்தில் உள்ள சில அங்கத்தினர் ராஜீய விஷயங்களில் பிரவேசித்து சங்க நடவடிக்கையை கெடுக்கிறார்கள் என்றும், உதாரணமாக சங்கத்தின் சார்பாய் ஒரு கதர் டிப்போ வைப்பதை சங்கத்தில் உள்ள சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரே கெடுத்தார் என்றும் இன்னும் பலவிதமாய் ராஜீய அபிப்பிராயங்களை சங்கத்தில் கொண்டுவந்து விட்டு சங்கத்தை ஒழுங்காய் நடைபெற முடியாமல் சூழ்ச்சிகள் செய்கிறார்கள் என்றும், ஆதலால் தான் இதில் ஸ்தானம் வகிப்பதில் பிரயோஜனமில்லை என்றும் சொல்லி ராஜிநாமா நிருபத்தை வாசித்தார். சங்க காரியதரிசியும் இதை ஒட்டியே சில வார்த்தைகள் சொன்னார். பிறகு பலர் கேட்டுக்கொண்டதின் பேரில் அதை திருப்பி வாங்கிக்கொண்டார் இப்படி இருக்க ஸ்ரீமான் நாயக்கர் சொல்வதை தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், அன்னியர்கள் தான் சங்கத்திற்கு உதவி தலைவாயிருக்க வேண்டுமென்று சொல்லி அதற்காகவே தான் ராஜிநாமா செய்வதாக சொன்னாரென்றும் "இந்து" "சுதேசமித்திரன்" பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. இது யோக்கியமானதாகுமா? நாம் கடினமான பதம் உபயோகிப்பதாய்ச்சொல்லும் பெருதுவான பதக்காரர்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

தொழிலாளர் சங்கத்தில் தொழிலாளி அல்லாதவர்கள் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்றால் இந்த அய்யர் அய்யங்கார் கூட்டங்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வந்து இவ்வளவு அல்பத்தனமான காரியம் செய்வானேன். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள்கூட தொழிலாளர் நிர்வாகத்தில் அன்னியர் கூடாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறார். பாவம்! ஏழைத் தொழிலாளரான வாயில்லாப் பூச்சிகளை ஏமாற்றி, தலைவர்களாகி, அவர்களின் ஓட்டுவாங்கி, பிராமணரல்லாதார் தலையில் கையை வைப்பதற்கு யாராவது விரோதமாயிருந்தால் அவர்களை அடியோடு ஒழிப்பதற்கு இவ்வளவு கொலைபாதகம் செய்யவேண்டுமா? இதுபோலவே கொஞ்ச நாளைக்குமுன் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் சொன்ன காலத்திலும் இந்த பிராமணப் புலிகள் சீறி விழுந்தனர். இந்த பிராமண சிகாமணிகளுக்கு தொழிலாளிகளிடம் அன்பு இருக்குமானால் வெளியிலிருந்து செய்யட்டுமே. முனிசிபல் எலக்ஷனில் யாராவது ஒரு தொழிலாளியை நிறுத்தி ஓட்டு வாங்கிக் கொடுக்கட்டுமே. சட்டசபைக்கு யாரையாவது நிறுத்தி ஓட்டு வாங்கிக் கொடுக்கட்டுமே. ஸ்ரீமான் புர்ரா, பாஷ்யம், மல்லய்யா, ஈ. எல். அய்யர் ஆகிய இந்த பிராமணர்களுக்காக பணம் செலவு செய்து கவுன்சிலராக்குகிறவர்கள் ஏன் இந்த தொழிலாளிகளில் ஒன்று இரண்டு ஆள்களுக்கு செய்யக்கூடாது. அதையெல்லாம விட்டுவிட்டு தொழிலாளிகளுக்கு என்ன வேண்டும் என்பதே தெரியாத சில பொறுப்பற்ற பிராமணர்கள் ஒன்று சேர்ந்துகொள்வதும், நாங்கள் தான்! தொழிலாளிகளுக்கு தர்மகர்த்தா, எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள் உங்களுக்கு சாதித்துவிடுகிறோம் என்று அவர்களை ஏமாற்றுவதும் அதற்கேற்றாப்போல் தொழிலாளிகள் கூட்டத்தில் ஏதாவது ஒன்று இரண்டு வாயாடிகளை எச்சுனும் கொடுத்து சுவாதீனம் செய்துகொண்டு அவர்கள் தயவில் உபசாரப் பத்திரம், மாலை, வண்டிசவாரி 'ஜெய்' முதலியவைகள் அனுபவிப்பதுமான காரியங்களுக்கு மாத்திரம் தொழிலாளிகளின் தலைவர்களாகவேண்டுமானால் இது எப்படி நடக்கும்? இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இந்தப் பொய்யர்கள், வம்பர்கள், சுயநலப் புலிகள் ஆகிய கூட்டத்தாருக்கு இடம் கொடுக்காமல் தங்கள் காலிலேயே தாங்கள் நிற்கும்படியான யோக்கியதையை அடையவேண்டுகிறோம். அதோடு கூடவே இந்தப் பார்ப்பனப் பத்திரிக்கைகளையும் நம்பி மோசம் போகாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.!

# எலக்ஷன் தந்திரம்.

## திருப்பூர் கால்நடைக் காட்சி

(சித்திரபுத்திரன் எழுதுவது)

திருப்பூர் கால் நடைக் காட்சியானது 2, 3 வருஷங்களுக்கு முன்னால் சென்ற சட்டசபைத் தேர்தலின் போது நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு இப்போது இவ்வருஷ சட்டசபை எலக்ஷன் போதுதான் கூட்டப்பட்டிருக்கிறது. அப்படி கூட்டப்பட்டபோதிலும் அதில் நடத்தப்பட்ட சங்கதிகள் ஒவ்வொன்றும் சட்டசபை மெம்பர்களின் ஓட்டுப்பிரசாரத்தில் குறி கொண்டே நடத்தப்பட்ட மாதிரியாகவேயிருக்கது.

அந்தக் குறியின் வேகத்தில் வழக்கமான ஒழுங்கு முறைகள் கூட சிதறுப்பட்டுபோனதோடு மக்களுக்கு இயற்கையாய் இருக்கவேண்டிய அபிமானமும் பறந்தோடி விட்டது.

விவசாயம் என்பது மாற்றப்பட்ட இலாக்காக்களில் ஒன்றான அபிவிருத்தி இலாக்காவை சேர்ந்தது. அதை நிர்வகித்து வருகிறவர் பிராமணரல்லாதார் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் சர். டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள். இப்படி இருக்க கவர்னர் அவர்களைக்கொண்டு கால் நடைக்காட்சியைத் திறக்கச்செய்வதும் ஸ்ரீமான் சி. சர். பி. ராமசாமி அய்யர் அவர்களைக்கொண்டு பரிசு வழங்கச் செய்வதுமான காரியங்கள் நடத்தப்பட்டிருக்கிறது.

முன் ஒரு சமயம் இதே திருப்பூரில் தாலூகா போர்டு கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்ட ஸ்ரீமான் சி. பி. ராமசாமி அய்யர் அவர்களை திருப்பூர்காரர்கள் அழைத்தபோது ஸ்ரீமான் அய்யர் அவர்கள் தாலூகா போர்டு மாற்றப்பட்ட இலாகாவாகிய மந்திரி பனகால் ராஜா அவர்கள் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டதென்றும், தான் அதில் பிரவேசிக்க முடியாதென்றும் சொன்னவர், இது சமயம் அதேமாதிரி மாற்றப்பட்ட இலாகாவாகிய ஸ்ரீமான் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் இலாக்காவுக்கு எப்படி ஏற்றுக்கொண்டார் என்பது விளங்கவில்லை. ஒரு சமயம் மாற்றப்பட்ட இலாகாவில் மந்திரிகளுக்கு அப்போதிருந்த செல்வாக்கு இப்போதில்லாமல் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டாலும், விவசாயக்காட்சி நடத்தியபிரமுகர் ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் இந்த இலாகா மந்திரியை அலட்சியம் செய்த காரணம் என்னவோ? ஒரு சமயம் தானும் ஸ்ரீமான்கள் டி. எ. இராமலிங்கம் செட்டியார் அவர்களும், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களும் பிராமணரல்லாதார் கட்சியை விட்டு சட்டசபை எலக்ஷனை உத்தேசித்து இப்போது புதிதாய் பிராமணர் கட்சியான சுயராஜ்யக்கட்சியில் சேர்ந்து விட்டதால் அக்கட்சிக்கு ஒரு ரகசிய சூத்திரதாரராயிருக்கும் பிராமண மந்திரியான சி. பி. ராமசாமி அய்யர் அவர்களுக்கு கௌரவம் கொடுத்து அவர்களால் தங்களுக்கு எலக்ஷனில் வெற்றி உண்டாக விளம்பரம் செய்யச் சொன்னார்கள் போலும். அதை உத்தேசித்தே ஸ்ரீமான் சி. பி. அய்யர் அவர்களும் தனதுபிரசங்கத்தில் ஓட்டர்கள் கவனித்து இவர்களுக்கே ஓட்டு செய்யத்தக்கவண்ணம் "மேல் பவானிதிட்டமானது இப்போது சென்னை சட்டசபையிலுள்ள உங்கள் பிரதிநிதிகளான ஸ்ரீமான்கள் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், டி. எ. இராமலிங்கம் செட்டியார், சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார் ஆகிய இவர்களால் வற்புறுத்தப்பட்டதின்பேரில் மேட்டூர் திட்டம் கவனிக்கப்பட்டதாகவும், மறுபடியும் இம் மூன்று பிரதி நிதிகளும் கிளப்பத்திற்றால் காரியம் நடக்குமென்றும்" சொல்லுகிறார். இதன் அருத்தம் என்ன? அடுத்ததேர்தலுக்கு மறுபடியும் இந்த மூன்று கனவான்களுக்கே ஓட்டு செய்யுங்கள், உங்கள் பூமிக்கு வாய்க்கால் வரும் என்று சொல்வது தானே அல்லாமல் வேறென்ன?

ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் என்கிற பிராமணரவர்கள். இந்த மூன்று பேருக்கே ஓட்டு கொடுங்கள், கள்ளு உலகத்தை விட்டே ஓடிவிடும் என்கிறார். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்செய்யுங்கள், சுயராஜ்யம் வந்துவிடும் என்கிறார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்றுபேருக்கே ஓட்டு செய்யுங்கள் பனகால் ராஜ கம்பெனியை பாப்பராக்கி விடலாம் என்கிறார்.

ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் என்கிற பிராமணரவர்கள் இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் முட்டுக்கட்டை போடலாம் என்கிறார். சர். சி. பி. ராமசாமி அய்யர் என்கிற பிராமணரவர்களோ இந்த மூன்று பேருக்கே ஓட்டு செய்யுங்கள் உங்கள் பூமிக்கு தண்ணீர் பாய்ச்சலாம் என்கிறார்.

இத்தனை பிராமணர்கள் இம் மூவரும் சட்டசபைக்கு வரவேண்டுமென்று பாடுபடுவதின் நோக்கமென்ன? எப்படியாவது பிராமணரல்லாதார் கட்டுப்பாட்டை உடைத்து தங்கள் பின்னால் தங்கள் சொற்படி ஆடும் பிராமணரல்லாதாரை கூடுமானவரை சட்டசபைக்குள் இழுத்து எப்படியாவது பிராமணரல்லாதார் இயக்கத்தை அடியோடு ஒழித்து பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கல்லாமல் வேறென்ன? அப்படிக்கில்லையென்றால் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் ஓட்டுப் பிரசாரத்துக்கு வரக் காரணமென்ன? சர் சி. பி. அய்யர் இந்த மூன்று போரால் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டது, இந்த மூன்றுபேரும் வலியுறுத்தினால் தண்ணீர் வரும் என்று சொல்லக் காரணமென்ன? இந்த மூன்றில் இரண்டு பேருக்கும் தங்கள் சமூகம் எக்கேடு கெட்டாலும் தங்களுக்கு அக்கரையில்லை. எப்படியாவது தங்களுக்கு சட்டசபை மெம்பரானால் போதும் என்கிற நிலையில் "என் மகன் செத்தாலும், மருமகள் தாலியறுத்தால் போதும்" என்கிற மாதிரி பிராமணர்கள் பின்னால் திரிகின்றார்கள்.

தங்களுக்கு, தங்கள் இனத்தாரிடம் ஏதாவது ஓட்டு, வேண்டுமென்றிருந்தால் அப்போது மாத்திரம்தானும் வேளாள குலம்—நீங்களும் வேளாள குலம் வேளாளர் ஓட்டு வேளாளர் அல்லாதாருக்குபோகலாமா? ஜாதி அபிமானம் வேண்டாமா, என்று உபதேசம் செய்து ஓட்டு கேட்பதும் தாங்கள் வேறு ஒருவருக்கு ஏதாவது செய்யத்தகுந்த சந்தர்ப்பம் இருக்கும்போது அந்த ஜாதியை மறந்துவிட்டு வேறு ஒருவருக்கு அதுவும் தங்களை சூத்திரன், தாசி மகன், அடிமை என்று சொல்லும் பிராமண வகுப்புக்கு, அதுவும் சர்க்கார ஊழியருக்கு அதை உபயோகிப்பதுமாயிருந்தால் குலாபிமானத்தின்பேரில் ஒருவரை போய்ஓட்டுக் கேட்க இவர்களுக்கு யோக்கியதை ஏது. ஸ்ரீமான் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் நல்ல கொழுத்தவேளாளர், ஸ்ரீமான்கள் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டரும் டி. எ. இராமலிங்கஞ் செட்டியாரும் வேளாளர். அவருக்கு இவர்கள் என்ன பெருமை தந்தார்கள்?

அல்லாமலும் எலக்ஷன் சமயம் பார்த்து கண்காக்ஷி எதற்கு கூட்டவேண்டும். இதனால் எவ்வளவு செலவு. வந்த அதிகாரிகள் பொது ஜனங்கள் பணத்தில் வந்திருக்கிறார்கள். அங்கு வந்த பதினாயிரக்கணக்கான பொது ஜனங்களும் எவ்வளவு பணத்தை செலவு செய்துகொண்டு வந்திருக்கவேண்டும்? எவ்வளவு பேர் இதன் பயனை சூதாட்டத்தில் கஷ்டமடைந்திருக்க வேண்டும்? இதனால் யாருக்கு என்ன லாபம்? சர். சி. பி, அய்யர் வந்து ஸ்ரீமான்கள் சி. வி. வெங்கிடரமணய்யங்கார் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், டி. எ. இராமலிங்க செட்டியார் ஆகிய இவர்களுக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று ஜாடையாய் (அதுவும் பிராமண நன்மையை உத்தேசித்து) சிபார்சு செய்வதற்கு பொதுஜனங்கள் பணத்தில் இவ்வளவு ஆடம்பரம் செய்யப்பட்டது என்றால் இதன் உண்மையறிந்த யாருக்குத்தான் மனம் வேதனை உண்டாகாது? நம் நாட்டு பாமர ஜனங்கள் இதை அறியாமல் எவ்வளவு பேர் எவ்வளவு பணம் செலவு செய்துகொண்டு வந்து வேடிக்கை பார்த்துப்போனார்கள். தெருக்கூத்துக்கும் கால் நடைக் காக்ஷிக்கும் என்ன வித்தியாசம்? கூத்தாடியும் ஜனங்களுக்கு ஒரு நல்ல படிப்பு ஏற்படக் கூத்தாடுவதாய் சொல்லுகிறான், கண் காக்ஷியும் ஜனங்களுக்கு விவசாய ஞானம் ஏற்படுத்துவதற்கு என்று சொல்லுகிறார்கள். இரண்டின் உள் கருத்தும் சுயநலம் அல்லாமல் வேறு என்ன?

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

சென்னை மாகாணத்தில் தான் சுயராஜ்யக் கட்சி அதன் வாலை ஆட்டுகின்றது. வட இந்தியாவில் அவர்களின் நிலை எவ்வாறிருக்கின்றது? அக்கட்சியிலிருப்போர் ஒவ்வொருவராய்ப்பிரிந்து போகின்றனர். பம்பாயில் சுயராஜ்யக் கட்சியின் தலைவரான ஸ்ரீ ஜெயகர் தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டார். காங்கிரசிலேயே பிறந்து காங்கிரசிலேயே வளர்ந்த லாலா லஜபதிராய், பண்டித மதன் மோகன மாளவியா முதலியவர்களும், மத்திய மாகாணத்து சுயராஜ்யக் கட்சியின் தலைவரான டாக்டர் மூஞ்சி, ஷாம்லால் நேரு கிருஷ்ணகாந்த மாளவியா முதலியவர்களும் அக்கட்சியிலிருந்து பிரிந்து விட்டார்கள்! பண்டித நேரு கூட ஓய்வு எடுத்துக்கொண்டு மலைக்குச்சென்றுவிட்டார்.

சுயராஜ்யக்கட்சி கோஷ்டி என்னை மிரட்டுகிறது. ஐயங்கார் கூட்டத்தார் என்னை மற்ற விடங்களுக்குப் போகவிடாமல் மறுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் செங்கல்பட்டு ஜில்லாவில் தங்களுடைய முழுபலத்தையும் பிரயோகிக்கப்போவதாகப் பயமுறுத்துகின்றனர். நான் அவர்கள் பயமுறுத்தலுக்குப்பயந்து நின்றுவிடமாட்டேன். எது வரினும் வரட்டும்! என்ன நேரினும் நேரட்டும்! மாகாணம் பூராவும் சுற்றவே போகின்றேன்! மறுமுறையும் சுற்றவே பேசுகின்றேன் என்பதை அக்கூட்டத்தார் உணரட்டும்!

## ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல்.

ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் செக்ரட்டரி திரு. மு. ச. முத்தூக்கருப்பஞ்செட்டியார் அவர்கள் தன்னை செக்ரட்டரி பதவியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று செய்திருந்த ராஜிநாமாக்கடிதத்தைப் பல நண்பர்களது வற்புறுத்தலின்பேரில் வாபஸ் பெற்றுக்கொண்டு அவரே செக்ரட்டரியாக யிருந்துவருகிறார்.

## சென்னைக் கவர்ன்மெண்டு இந்திய மருத்துவ பாடசாலை.

இப்பாடசாலையிலுள்ள சித்தவைத்திய வகுப்பிற் சேர்ந்து படிக்க விருப்பமுள்ள தமிழும் ஆங்கிலமும் தெரிந்த மாணாக்கர் 1926-ம் வரு ஜூன் மீ 15-ந் உக்குள் கவர்ன்மெண்ட் இஸ்கூல் ஆப் இண்டியன் மெடிசின்ஸ்—செக்ரடெரி யவர்கள், எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு மனுவை அனுப்பவேண்டும்.

ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியவர்களும் ஷை பரீக்ஷைக்குப் போனவர்களும் பெரும்பாலும் அங்கீகரிக்கப் படுவார்கள் என்று தெரியவருகிறது என தமிழ் வைத்திய சங்க அமைச்சர் எழுதுகிறார்.

யாக க்ஷத்திரிய

## தெலுங்கச் செட்டியார்கள் மகாநாடு

இச் சமூகத்தாரின் 4-வது கான்பிரென்சை நடத்திவைக்கும் பொருட்டு குலாபிமானிகள் பலர் விடா முயற்சியுடன் உழைத்து வருகின்றனர். இத்துடன் ஒவ்வொரு ஊராரும் ஒருங்கு சேர்ந்து ஒத்துழைத்து மகாநாட்டை பூர்த்தியாக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இம் மகாநாடு வரும் செப்டம்பர் மாதத்திற்குள்ளாக மைசூரிலாவது ஈரோட்டிலாவது நடைபெற, வேண்டிய பிரயத்தனங்கள் நடந்துவருகின்றன. விவரங்கள் தெரிய விரும்புவோர் ஸ்ரீமான் வி. பி. வேங்கடராமஞ் செட்டிகாரு, காமாக்ஷி விலாச வாசகசாலைக் காரியதரிசி, கோயமுத்தூர் என்ற விலாசத்திற்கெழுதி தெரிந்து கொள்ளவும் என்று குலாபிமானி என்னும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கொங்கு வேளாளர் சங்கம்.

### மதுவிலக்குத் தீர்மானம்.

கொங்கு வேளாளர் சங்கத்தின் மூன்றாவது மகா நாடு சில மாதங்கட்கு முன் பொள்ளாச்சியில் கூடி பல தீர்மானங்களைச் செய்துகலைந்தது. கடந்த இரண்டு மகா நாடுகளில் செய்யப்பட்ட தீர்மானங்கள் காகிதத்தினளவே நின்றுவிட்டனவென்றும், எத்தகைய உருவான வேலையும் செய்யப்படவில்லையென்ற உணர்ச்சியும் கடந்த மகாநாட்டில் யாவர் மனதிலும் ததும்பிக்கொண்டிருந்தது. சங்கத் தீர்மானங்களைக் கண்டிப்பாய் அமுலுக்குக் கொண்டுவர வேண்மென்ற உணர்ச்சி மேலீட்டால், தொண்டர் படை யொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், பஞ்சாயத்துச்சபை யொன்று காணவேண்டுமென்றும், இவற்றின் செலவின் பொருட்டு நன்கொடை வசூலிக்க வேண்டுமென்றும், வெகு உக்கிரமமாகப் பேசப்பட்டுத் தீர்மானங்களாயின. ஆனால் நாளது வரை ஒன்றையுங்காணோம். நிற்க:

கொங்கு வேளாளர் சங்கமென்றால், மதுவிலக்குவோர் சங்கமென ஒரு காலத்தில் அதிகார உலகத்திலும், பத்திரிகையுலகத்திலும் பிரக்யாதி சிளம்பிற்று. மதுவிலக்கு இல்லாவிடில் உண்மையில் கொங்கு வேளாள சங்கத்துக்கு இருப்பிடமுமில்லை.

கடந்த மகாநாட்டில் வழக்கம்போல் மதுவிலக்கு தீர்மானம் வந்தது. மது விலக்கின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்கள். மதுவிலக்குக்காக அரசாங்கத்தின் உதவி கிடைத்தலரிதெனச் சீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள் வெளிப்படையாகச் சொன்னார். மதுவிலக்கை இன்ன வகையால்தான் நிறைவேற்றவேண்டுமென்ற வகை காணாமல், வழக்கம்போல் குருட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "இத்தீர்மானத்தால் பயனில்லை. இதை நிறைவேற்ற வழி காண்பியுங்கள். சாதிக்கட்டுப்பாட்டை வலியுறுத்துங்கள். இல்லையேல் சாத்வீக மறியலுக்கு அதிகாரம் கொடுங்கள். வீண் தீர்மானத்தால் பயனில்லை. நல்லவர் நஷ்டமுறவும், கெட்டவர் இலாபமுறவுந்தான் இத்தீர்மானமுதவும்" எனச் சீமான் அய்யாமுத்துக் கவுண்டர் வாதாடியும் பயனற்றுப் போயிற்று.

இத்திறனற்ற தீர்மானத்தால் மதுவுக்கு நாள்தோறும் ஆதரவு பெருகிக்கொண்டிருக்கிறது. ஏனெனில் இச்சமூகத்திலுள்ள பல பிரபலஸ்தர்கள், பட்டைக்காரர்கள், ஜமீன்தார்கள், மிராஸ்தார்கள் போன்ற செல்வச் சீமான்களே அழிவினையைக் கருதாமல் சிறு தொகைக்காசைப்பட்டு கள்ளுக்கு மரங்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இச்செல்வர்கள் இலாபமுறுதலைக் காண மனஞ்சகியாத பல தலைவர்களும் கள்ளுக்கு மரங்கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

உதாரணமாகப் பொள்ளாச்சி தாலூகாவில், மாரப்பகவுண்டன்புதூர், எனும் கிராமத்தைச் சேர்ந்த எனது உறவினர் ஸ்ரீமான் எம். ஆர். சின்னசாமிக்கவுண்டர், சென்ற சிலவாண்டுகளாக மதுவிலக்கில் முனைந்து வேலை செய்து வந்தார். பற்பல கிராமங்களுக்குச் சென்று கட்டுப்பாடு செய்துவந்தார். கடந்த மகாநாட்டைக் கூட்டி நடத்திய முக்கியஸ்தர்களிலொருவராயுமிருந்தார். இப்பெரியார், குலாபிமானத்தையும், மதாபிமானத்தையும் தற்போது மறந்து, சென்ற மாதம் தமக்குச் சொந்தமான நூறு தென்னைகளை கள்ளுக்குக் கொடுத்துவிட்டார். "பக்கத்திலிருக்கும் ஜமீன்தார் கள்ளுக்கு மரங்கொடுத்து இலாபமடையவில்லையா? நான் கொடுக்காமல் நஷ்டமடைவதா? முதலில் பெரியவர்கள் மது விலக்கட்டும். பிறகு நாங்களும் விலக்குகிறோம்," என்ற பதிலையும் என்போன்றவர்களுக்குச் சொல்லிவிட்டார்.

இந்நிலைமையை மாற்ற கொங்கு வேளாள சங்கத்தலைவர்கள் எத்தகைய முயற்சி யெடுக்கப் போகிறார்களென்று என் போன்றவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சே. கோபாலசாமிக்கவுண்டன்,

சிங்காரம்பாளையம்.

---

## மசூதி முன் வாத்திய கோஷம்.

கல்கத்தா நகரில் முகமதியர்களின் மசூதிக்கு முன் ஆரிய சமாஜத்தார் வாத்திய கோஷம் செய்து கொண்டு போனதால் விளைந்த இந்து முஸ்லீம் கலவரத்தைப்பற்றி சென்னையினின்று வெளிவரும் "தாருல் இஸ்லாம்" என்னும் முஸ்லீம் சமூகத்தார் பத்திரிகை எழுதியிருப்பதில் ஒரு பாகமாவது:—

"எச்சரிக்கை செய்த முஸ்லிம்கள் அவர்களுடைய (ஆரிய சமாஜிகள்) அறிவில்லாப் பிடிவாதத்தைக் கண்டு ஹிந்துத் தலைவர்களிடம் போய்ச் சொல்லாமலும், அல்லது பொறுமையுடன் விட்டுக் கொடுக்காமலும் கலகம் விளைவித்துக் கொண்டு நாட்டை இத்துணைக் கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்ததற்காகவும், அவ்வளவு உயிர்கள் மரிக்கவும், நிரபராதிகள் தாக்கப்படவும் காரணமாய் இருந்ததற்காகவும் நாம் பெரிதும் வருந்துகின்றோம். இதனால் மஸ்ஜிதின் பக்கம் ஹிந்துக்கள் தாராளமாக வாத்தியகோஷம் செய்யலாமென்று நாம் கூறவில்லை. ஹிந்துக்கள் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னரும் பிடிவாதத்துடன் இருந்தார்களாயின் அப்போது தேச க்ஷேமத்தைக் கோரியேனும் முஸ்லிம்கள் விட்டுக்கொடுத்திருக்கலாமென்பதே நமது அபிப்பிராயம். மஸ்ஜிதில் ஏகாக்கிர சித்தத்துடன் ஆண்டவன் ஞாபகமாகவே தொழுது கொண்டிருக்கும் ஒருவரை இந்த மேளதாளங்களேயல்ல, வேறெவ்விதமான கொடுமைகளும் அவருடைய தியானத்தைக் கலைத்துவிடமாட்டா. ஆண்டவனிடத்தில் பக்தி செலுத்திக்கொண்டிருக்கும் ஒருவர் வெளியில் ஹிந்துக்களின் வாத்திய கோஷம் கேட்டவுடன் தடியெடுத்து வருவதாயின் அன்னாருடைய பக்தியைப்பற்றி என்னென்றுரைப்பது?"

---

## ஹிந்து யுவதி சரணாலயம்.

—o—

சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஹிந்து யுவதி சரணாலயத்தில் தலைவி ஸ்ரீமதி யாமினி பூர்ண திலகம்மாள் கோயமுத்தூருக்கு விஜயம் செய்த சமயத்தில், செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சீமான் சி. கு. நாராயணசாமி முதலியார் சபைத்தலைமை வகித்தார். அநேக தேவதாசிகளும் சமூக ஊழியர்களும் விஜயமாயிருந்தனர். தேவதாசிகளின் தற்கால நிலைமையையும் அவர் இவ்வாழ்வினின்று மீட்கவேண்டிய அவசியத்தைக் குறித்தும் ஸ்ரீமதி திலகம்மாள் ஒரு மணிநேரம் தமிழில் பிரசங்கம் செய்தார்கள். விபசாரம் தொன்று தொட்டு நின்று வேரூன்றி விட்ட தொரு அபசாரமாகுமென்றும் இந்த ஒழுங்கீனத்திற்கு உலகிலுள்ள எம்மதமும் சம்மதம் தந்ததில்லையென்றும் சொல்லி, ஹிந்து யுவதி சரணாலயத்தின் உபயோகத்தை எடுத்துக் காட்டி அதன் பாதுகாப்புக்கும், தம்மால் நடைபெறும் "ஹிந்து யுவதி" என்கிற தெலுங்கு வாரப் பத்திரிகை நடத்துவதற்கும் திரவிய சகாயம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள்

செங்குந்தமகாஜன சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் என். இலக்ஷ்மண முதலியாரும் சி. பி. சுப்பய்யா முதலியாரும் இதைத் தொடர்ந்து பேசியபின் சபைகலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## காட்டு நாயக்கன் பட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை திறப்புவிழா.

---

நிகழும் வைகாசி மீ 10ந் தேதி 23-5-26 இவ்வித்தியா சாலையின் திறப்பு விழா, திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்ட் பாளையங்கோட்டை திரு. திவான் பஹதூர் எஸ். குருசாமி ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் இவ்வித்தியாசாலையின் முதல் கர்த்தாவான பொன்னுசாமி நாடாரைப்பற்றியும், கிராம பாடசாலைகளின் அவசியத்தைப்பற்றியும், பேசிவிட்டு வெள்ளித்திறவுகோலால் பாடசாலையைத் திறந்து வைத்தார். "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் ஆ. ஆ. முத்து நாடார் வித்தியா தர்மம் என்பதைப்பற்றியும், அருள்தங்கையா "கல்வி" என்பதைப்பற்றியும், பேசினார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கும்பகோணம் ஸ்ரீ காமாக்ஷி விலாச வாசக. சாலை. ஆண்டு நிறைவு விழா.

—:●:—

இவ்வாசக சாலையின் ஆண்டு நிறைவு விழா கும்பகோணம் மங்களாம்பிகை தியேட்டரில் நிகழும் வைகாசி மாதம் 22-ந் தேதி சனிக்கிழமை பிற்பகலில் ஈரோடு திரு. ஈ. எஸ். அர்த்தநாரி ஆச்சாரியார் தலைமையின் கீழ் பல அறிஞரின் சொற்பெருக்குடன் நடைபெறும்.

## தமிழ் வளர்ச்சி மகா நாடு
## தூத்துக்குடி.

—:○:—

உயர்தனிச் செம்மொழி யென்று பலராலும் போற்றப்படும் நந் தாய்மொழி இது போழ்து தாழ்நிலையுற்றிருக்கின்றது. மொழிப்பற்றுள்ளார் பலர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக யாதேனுஞ் செய்தல்வேண்டும் என்று விரும்புகின்றார். எனினும், தீவிர முயற்சி யொன்றும் இதுகாறுஞ் செய்யப்பெறவில்லை. மொழி வளர்ச்சியின்றேல், நாட்டில் எவ்வளர்ச்சியும் இன்றாம். ஆகலான், தமிழ் மொழி, வளர்ச்சியுறுதற்குச் செய்யனத் தக்கவற்றை ஆராய்தற்பொருட்டு அத்தகைய மகாநாடு கூட்டுவிக்கத் தூத்துக்குடி தமிழர் சிலர் முயன்று வருகின்றனர்.

தூத்துக்குடி நகரில் "தமிழ் வளர்ச்சி மகாநாடு" கூட்டுவதைப் பற்றி ஆலோசிப்பதற்குச் சித்திரை திங்கள் 26-ம் நாள் சனிக்கிழமை 7-மணிக்கு எஸ். ஏ. வி. உயர்தர கல்லூரியில் தமிழன்பர் கூட்டம் ஒன்று கூடிற்று. திரு. அ. ரி. அ. சு. துரைசாமி நாடார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழ் வளர்ச்சி மகாநாடு கூட்டுவதின் ஆவசியத்தையும் அதின் நோக்கங்களையும் பற்றி திரு. ஆ. அருள்தங்கையா அவர்கள் சொன்னார்கள். பின்னர் அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 'தமிழ் வளர்ச்சி மகா நாடு' என்று இந்நகரில் (தூத்துக்குடியில்) கூடிய விரைவில் கூட்டப்படவேண்டுமென்று இச் சபை தீர்மானிக்கிறது.

2. அடியிற் கண்டவர்களை அங்கத்தினர்களாகக்கொண்ட தற்கால தொழிற்கழகமொன்று நிறுவப்பட்டது.

தலைவர், திருவாளர். சி. வ. நல்லபெருமாள் பிள்ளை, அமைச்சர்கள், 1. அ. செ. முத்தையரெட்டியார், (காரியதரிசிகள்) 2. ச. சிவகுருநாத பிள்ளை, 3. திரு. ஆ. அருள்தங்கையா, 4. திரு. இ. கி. நடேசசர்மா, 5. திரு. ரா. செ. சுப்பிரமணிய அய்யர், 6. சு. அ. சுப்பிராய பிள்ளை, பொக்கிஷதார், சி. த. சிதம்பரஞ் செட்டியார், அங்கத்தினர், 1. அ. ரி. அ. சு. துரைசாமி நடார், 2. மாசில்லாமணி பிள்ளை, 3. மஸ்கரஞ்ஞா, 4. பா. வ. குற்றாலிங்கம் பிள்ளை, 5. கண்ணாயிரம் பிள்ளை, 6. அ. சுந்தரேசய்யர், 7. விக்டர் பொன்னைந்து.

3. மேற் கண்ட கழகத்தார், வரவேற்புக்கழக அங்கத்தினர்கள் சேர்க்கவும், நன்கொடைகள் வசூலிக்கவும், இவ்வைகாசி மாதத்துக்குள், வரவேற்புக்கழக கூட்டம் கூட்டி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. மூன்று ரூபாயுக்குக் குறையாமல் சந்தா செலுத்துபவர்கள் வரவேற்புக் கழகத்தின் அங்கத்தினராவார்கள்.

5. மகா நாடு நடத்துவதற்கு சுமார் ரூ.1,500 செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

6. மேற் கண்ட விஷயங்கள் பத்திரிகைகளுக்கு அறிவிக்கபடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது

---

## பார்ப்பன ஆதிக்கமா?

நான் ஏற்கனவே "இதில் யார் கெட்டவர்கள்" என்று எழுதிய வியாசத்தில் அதிகார வர்க்கத்தின் சர்ட்டிபிகேட் ஆக்டைப் போல் ஓர் தீர்மானம் மதுரையில் செய்து பார்ப்பன சூழ்ச்சியை அழிக்க முயலும் ஸ்ரீ இராமசாமி நாயக்கர் போன்றவர்களை காங்கிரசிலிருந்து தூரத்த பிரயத்தனப்படுகிறார்கள் என்று எழுதினேன். ஆனால் வேறு பல சூழ்ச்சிகளும் செய்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக என்னையே விளங்கும்படி செய்துள்ளவற்றை சொல்லுகிறேன். அதிலிருந்து மற்ற விஷயங்களை தாங்களே அறிந்துகொள்ளலாம். சென்ற நவம்பரில் நன்னிலம் தாலூகா கமிட்டி தேர்தலில் நானும் ஸ்ரீ M. K. ஆச்சாரியாரின் சிஷ்யப்பிள்ளை போன்ற ஒரு பார்ப்பனரும் கூட்டுக் காரியதரிசிகளாக இவ்வாண்டு நிர்வாகத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்டோம். ஆனால் கூட்டாளியாகிய பார்ப்பன காரியதரிசியும் மற்ற பார்ப்பன காங்கிரஸ் காரர்களும்-நான் காரியதரிசியாக இருப்பின் நன்னிலம் தாலூகா "மைலாப்பூர் கோட்டை" என்று சொல்ல இயலாமல் போய்விடும் என்று எந்த விதத்தில் என்னை கழிப்பது என்று பார்த்தார்கள். ஒரு விதத்திலும் முடியவில்லை. கடைசியாக காரியதரிசியாகிய எனக்காவது பிராமணர் அல்லாத நிர்வாக-அங்கத்தினர்களுக்காவது அறிவிக்காமல் சென்ற 8-5-26-உயில் மற்ற பார்ப்பன-காரியதரிசியாகியவரின் வீட்டில் கூட்டம் கூட்டி புதிதாக இவ்வாண்டுக்கு தேர்தல் நடத்தியுள்ளதாக பத்திரிக்கைகளிலும் எழுதி எனக்கும் அறிவித்துள்ளார்கள்.

இது எவ்வித நியாயம் என்பது தெரியவில்லை. வருஷத்தில் இருமுறை ஆபீஸ் ஸ்தாபகர்கள் நியமிக்க என்ன விதி இருக்கிறது என்பதும் தெரியவில்லை. இந்த நியாயங்களை எல்லாம் விவரித்து "சுதேசமித்திர"னுக்கு ஓர் கடிதம் எழுதினேன். அதற்கு பிராந்தி விளம்பரங்களுக்கும் மற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும் இடம் கிடைக்கிறதே ஒழிய என்னுடைய 4 பக்கம் கொண்ட கடிதத்திற்கு 4 வரிகள்தான் இடம் கிடைத்தது. ஏன்? பார்ப்பன காரியதரிசியின் அடாத செய்கையை உள்ளபடி எடுத்துக் காட்டியுள்ளதால்.

இதைப்பற்றி டாக்டர் P. வரதராஜுலு நாயுடுகாருக்கும் R. K. ஷண்முகம் செட்டியாருக்கும் அறிவித்துள்ளேன். அவர்களால் மகாண கமிட்டியில் பழைய தேர்தலை உறுதிசெய்ய முடியாதவரையில் நான் பழைய கமிட்டியின் பேரிலேயே "சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர் கக்ஷி" என்று பிரசாரம் செய்யப்போகிறேன்.

என். வி. கலியாணசுந்தரம்.
காரியதரிசி,
நன்னிலம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி.


கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

### அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க்கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.




12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

### சத்திய வேத வீரியதாது லேகியம்.

20-நாள் 40-வேளைக்கு விலை ரூ. 2.

தேகாரோக்கியம் குன்றி, தேகம் வெளுத்து உட்காரவும் எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு சுறு சுறுப்பு, புஷ்டி, ஆண்மை முதலியவற்றை ஊட்டும். மூத்திரச் சூடு, சுக்கில பிரமேகம், கல்லடைப்பு, குழிப்புண் உஷ்ணப்புண், அஸ்தி உருக்கம் முதலிய பயங்கர வியாதிகளின் ஆணி வேரைக்கெல்லி யெறிந்து தாதுவை கெட்டிப்படுத்தி தேகத்தை வனப்புறச்செய்யும் கைகண்ட ஒளஷதம் சத்திய வேத வீரிய தாதுலேகியம் ஒன்றே.

விலாசம் தெரியப்படுத்தினால் சத்திய வேத வைத்திய சாலையில் செய்யப்படும் சகல வியாதிகளையும் போக்கும் மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் அனுப்பபடும்.

குறிப்பு:— டாக்டர் ஜி. எல். சாமி அவர்கள் திருச்சினாப்பள்ளி இடத்தெருவில் தருமதமிழ் சித்த வைத்திய சாலை ஒன்று நடத்தி வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கள் இனமாக மருந்து வாங்கி சாப்பிட்டு குணமடைந்து வருகிறார்கள்.

டாக்டர். ஜி. எல். சாமி,
சத்திய வேத வைத்தியசாலை, வரகநேரி—திருச்சினாப்பள்ளி.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிவப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0

12 அவு. பாட்டல் ரூ. 2—2—0

வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவித மான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,

செப்பக்குளம் போஸ்டு திருச்சிநாப்பள்ளி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹாசந்தனாதித் தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது! வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம்மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து அதன் குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிரதியில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0

12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0

6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை.

## குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள ஹிக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்

கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்.

சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ

திருப்பூர்—ஸ்ரீ குரு. ராமலிங்கம் செட்டியார். மண்டி

திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.

கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெரு.

திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.

நாகபட்டணம்—ஸ்ரீ என். பி. காளியப்ப தேவர் நெ. 3242. கொல்லுபட்டறை

மதுரை—நியூஸ் ஏஜண்டு, சவிளிப் பஜார்,

விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.

மதராஸ்—நியூஸ் ஏஜண்டு, நெ. 27. எரபாலு செட்டி வீதி.

கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.

தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.

நாச்சியார்புரம்:— ஸ்ரீ ந. மெ. தியாகராஜா.

கொழும்பு:— ஸ்ரீ பி. பி. கே. மாணிக்கவாசகம், நெ. 52. செட்டி தெருவு.

ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C/o போர்னியோ மோட்டார் (லிமிடெட்.)

சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டுஅமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

## சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை அக்ஷய-ஹு சித்திரை-மீ 1-உ யிலிருந்து வெளிவருவது; ஒவ்வொரு தமிழ் மக்களாலும் ஆதரித்துப் போற்றத்தக்கது,

வருடசந்தா தபாற்செலவுடன் ரூ. 2.

வீ. அருணாசலம்,

நெ. 52. செட்டித் தெரு, கொழும்பு.

## நோட்டீஸ்

மாணவர் விடுதி.

கோயமுத்தூர் ஜில்லா போர்டார்களின் ஆதரவில் 1926-ம் வருடம் ஜூன் மாதம் 15-ந் தேதியிலாவது அல்லது அதற்கு முன்னேயாவது, ஸ்டேன்ஸ் ஹைஸ்கூலுக்குப் பின்னுள்ள பிரேஸர்கட்டடத்தில், கோயமுத்தூரில் வாசிக்கும் அயலூர் மாணவர்களுக்கென ஓர் ஹாஸ்டல் திறந்து வைக்கப்படும். அதில் குடியிருக்க எவ்வித வாடகையும் வசூலிக்கப் படமாட்டாது. சாப்பாட்டிற்காகும் செலவை, மாணவர்களிடம் வீதாசாரம் பிரித்து வசூலிக்கப் படும். இதில்சேர விரும்பும் மாணவர்கள் ஜூன் மீ 10-ந் தேதிக்குள் கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களுக்கு மனுச் செய்துகொள்ள வேண்டியது

ஜில்லா போர்டு ஆபீஸ், கோயமுத்தூர், 17—5—26.

இரத்தின சபாபதி முதலியார். ஜில்லாபோர்டு பிரசிடெண்டு.

## இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

காப்பு திரவியம்—ரூ. 2,706.

மூல திரவியம் — ரூ. 5,00,000.

வெளி விடப்பட்டது — ரூ. 64,600,

வசூலிக்கப் பட்டது — ரூ. 35,540.

டிபாசிட்டுகள் ரூ. 42,012-14-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாசம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாசம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நானது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்ந்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எல்லையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வ் பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

10—2—26.

ஜி. ராமச்சந்திர செட்டி, மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.